"கியூறியா" சபையில் பல பெரு நிகழ்ச்சிகள்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

காவலன்

தந்தி: "தேவிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத்.| யாழ்ப்பாணம், 1958-ம் ஆவது தை மீ 27-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 4-ம் இல.

பங்குனிமாதம் 1-ம் திகதி பாப்பரசர் வெளிப்படுத்த இருக்கும் கியூறியா சபை மாற்றங்கள் பலவற்றின் முன்னோடியாக, சென்ற வாரம் பல நிகழ்ச்சிகள் வத்திக்கானில் நடந்துள்ளன.

● கியூறியாசபை அம்சங்களின் மூன்று பெரும் தலைவர்கள் சுகயீனம், வயோதிபம் ஆகிய காரணங்களால் ஓய்வுபெறுவதற்கு விண்ணப்பித்துக்கொண்டதை பரிசுத்த தந்தை ஏற்றுக்கொண்டார். மூவரும் கருதினல்மார் முறையே ஒட்டாவியானி, லரூனை, லொகாரோ ஆகியவர்களே. இவர்களின் இடங்கள் இவர்களிலும்பார்க்க இளமையுள்ளவர்களால் நிரப்பப்படுகின்றன — மேலும், இத்தாலியர் அல்லாத கருதினல்மார் இவர்கள். கருதினல் ஒட்டாவியானியின் இடத்தில் கொமியூனிஸ்த நாடாகிய யூகோசிலேவியாக்கருதினல் செப்பர் என்பவர் நியமனம் பெற்றிருக்கின்றார். லரூனை, லெகாரோ அடிகளார் இருவரும் செய்துவந்த வேலையை சுவிற்சலாந்து தேசத்தவராகிய கருதினல் கட் என்பவர் செய்யவிருக்கிறார். இந்நியமனங் கியூறியா சபை மேலும் சர்வதேசங்கள் மயமாக்கப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

● வேதப்பரப்புதல் சபையின் வேலைகளின் ஆலோசகர்களாக 24 பேர் கொண்ட ஒரு பேரவை நியமிக்கப்பட்டிருக்கின்றது. அதில் 16 மேற்றிராணிமார்களும், 4 சபைஅதிபர்களும், 4 வேதப்பரப்புதல் சபைப் பிற அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

வண. கிறவுதர் அடிகளாரின் சந்நியாச தங்கயூபிலி

இலங்கையிலுள்ள யேசுசபைக் குருமாரின் மாகாணசிரேஷ்டரான வண ஏ. ஈ ஏ கிறவுதர்சுவாமிகள் தாம் சந்நியாசஅந்தஸ்தில் பிரவேசித்த ஐம்பதாவதுஆண்டுநிறைவின் தங்கயூபிலியை அடுத்துவருகிழமும் மாசி மாதம் 1ஆம்திகதி வியாழக்கிழமை கண்டுகளிக்க விருக்கின்றார். 1897 ஆம் ஆண்டு ஆனிமாதம் 4 ஆம் திகதி பிறக்தசுவாமியவர்கள் தாம் முன்னிருந்த அங்கிளிக்கன், புறொட்டஸ்தாந்த சபையிலிருந்து மனந்திரும்பி 1917 ஆம் ஆண்டு தைமாதம் 6 ஆம்திகதி கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்து துறவறபதவியை மேற்கொண்டு 1918 ஆம் ஆண்டு மாசி மாதம் 1 ஆம்திகதியன்று பேசுசபையில் ஒரு சந்நியாசராகப் பிரவேசித்தார்.

பின்னர் 1927 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 21ஆம்திகதி குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்ற வண. கிறவுதர்சுவாமிபவர்கள் திரிகோணமலை புனிதசூசையப்பர் கல்லூரித்தலைவராய், மட்டக்களப்பு புனிதமைக்கேல்கல்லூரி அதிபராய், திரிகோணமலைமேற்றிராசனகத்தோலிக்க பாடசாலைகளின் ஜெனறல்மனேஜராய், திரிகோணமலை யேசுசபைமிஷன் சிரேஷ்டராய்ப் பல்வேறு உயர்பதவிகள் வகித்திருந்து ஈற்றில் இலங்கை யேசுசபை மாகாணத்தில் மாகாணசிரேஷ்டராக 1952 ஆம் ஆண்டு நியமனஞ் செய்யப்பெற்றார்.

சுவாமிகளின் இந்தயூபிலிவிழா ஒருசிறிய குடும்பவிழாவாய் லெவெலியிலே மாசிமாதம் 6ஆம்திகதியன்று கொண்டாடப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. அதில் அவரது உடன்யேசுசபைக்குருமார் பலரும் கலந்துகொள்வார்கள்என்பதில் சந்தேகமேபில்லை. சுவாமிகள் கார்த்தரின் திராட்சைத்தோட்டத்தில் இன்னும் அநேகவருடகாலம் திருத்தொண்டாற்றிவர வேண்டியாசித்து, எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, "பாதுகாவலன்" வாசகர்கள் பேரால் யூபிலிச்சோபனவாழ்த்துக் கூறுகின்றோம்.

வழக்கறிஞர்களின் மருதமடுத் திருயாத்திரை

நீர்கொழும்புக் கத்தோலிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தின் வருடாந்த ஞானவொடுக்கம் இம்முறை மருதமடுத் திருச்சேத்திரத்திலே நிகழும் தைமாதம் 12 ஆம்திகதிமுதல் 15 ஆம் திகதிவரை பக்தியருட்சிக்குரியதாக நடந்தேறியது. நீர்கொழும்பிலிருந்து மட்டுமல்ல, கம்பகா, குருநாகல், பலப்பிட்டி, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்புமுதலாம் அநேக பிறவிடங்களிலிருந்தும் வழக்கறிஞர்களும், அவர்களின் குடும்பத்தினர்களுமாகப் பெருந்திரளானோர் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். அவர்களிலே பலப்பிட்டி மாவட்டநீதிபதி திரு. ஜே எவ் ஏ. சூசா அவர்களும், யாழ்ப்பாண மஜிஸ்றேற் திரு எஸ். அகஸ்ரீன் சில்வா அவர்களும் அடங்கியிருந்தார்கள்.

திருமீட்பர் சபையைச் சேர்ந்த வண காம்பொஸ்சுவாமிகளால் ஞானவொடுக்கம் போதிக்கப்பட்டது. சங்கத்தின் ஆத்மீகத்தலைவர் வண. றேமெண்ட் பீரிஸ், வண. ஸ்ரான்லி மெலாவா, வண சுவகரன் எனும் குருப்பிரசாதிகள் மூவரும் அவருக்குத் துணையாய் நின்றார்கள். ஞானவொடுக்கத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் 14 ஆம் திகதி மாலையன்று நீர்கொழும்புக் கத்தோலிக்க வழக்கறிஞர்சங்கத் தலைவரான திரு. ஜே.என்.ஏ.டிகுருஸ் அவர்களால் இடப்பட்டபக்திபோசனத்திலே விருந்தினராய் அமர்ந்து கொண்டார்கள். அதிலே அவர் பேசியபொழுது:

"நீர்கொழும்புக் கத்தோலிக்க வழக்கறிஞர்சங்கம் இற்றைக்குப் பதினைரு ஆண்டுகளின்முன் 1957-ம் ஆண்டு தைமாதம் 14 ஆம்திகதியன்று மருதமடுத்திருப்பதியிலே அடியிடப்பட்டது; அது பெரும்கஷ்டங்களை எதிர்நோக்கியபோதிலும் இந்த ஞானவொடுக்கத்தைக் கடந்தபதினைரு ஆண்டுகளிலும் இடையிலே நின்றுவிடாது தொடர்பாக ஒழுங்குபடுத்தி நடாத்திவந்திருப்பது பெருமைப்படத்தக்கது; சடடத்தொழிலில் ஈடுபட்டுள்ள அதிகமான அங்கத்தவர்கள்— முக்கியமாக இளம் வழக்கறிஞர்கள் இந்தநல்லஇயக்கத்தில்சேர அழைக்கப்பட வேண்டும்" எனக்கூறினார்.

அன்றிரவு சற்றுமுன்னதாக லூர்துகெபிக்கு நடைபெற்றமெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரத்தில் அங்கத்தவர்களும், அவர்களின் குடும்பத்தவர்களும் கலந்துகொண்டார்கள். திருக்கெபியிலே அனைவரையும் மாதாவுக்கு சேர்ந்து காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் வைபவம் யாழ்ப்பாணமஜிஸ்ரேற்திரு.எஸ் அகஸ்ரீன் சில்வா அவர்களால் நடத்தப்பட்டது. ஈரூந்தசெபங்கள் சங்கத்தை அடியிட்ட அங்கத்தவர்களில் ஒருவரான நீர்கொழும்பு கிறவுண்புறொக்டர் திரு. சி. எம். பெர்ணண்டோ அவர்களால் வாசிக்கப்படலாயிற்று.

"எனக்குப் புதினமாய் இருக்கின்றதே!" என்கிறார் கருதினல்

வியன்னாநகர கருதினல் கோனிக் அடிகளாரைப் பத்திரிகைநிருபர்கள் தரிசித்து, வியற்னும் செல்லும் பாப்பரசரின் தூதுக்குழுவுக்கு அவர் தலைமை வகிக்க இருப்பதாக வதந்திகள் உலாவுகின்றன என்று அறிவித்தபோது, "நீங்கள் கூறுவது எனக்குப் புதினமாய் இருக்கிறதே', என்று கூறினார் கோனிக் அடிகளார். பல கொமியூனிஸ்த நாடுகளில் பாப்பரசரின் தூதுவராகச் சென்று சமரசமுயற்சிகளில் முன்னர் ஈடுபட்டிருப்பதே இவ்வாறு பத்திரிகைநிருபர்கள் இவரை நாடினதற்குக் காரணம்.

வெள்ளிக்கிழமைகளை பசித்தோர் உதவிநாள் ஆக்குக

ஜேர்மனிதேச மேற்றிராணிமார் சபைத்தலைவராகிய கருதினல் டொப்னர் உலகில் பசியினால் வாடும் மக்களுக்கு உதவி புரிய விசேஷ கொடையளிக்கும் தினமாக வெள்ளிக்கிழமைகளை அனுசரித்துவர அப்பிரதேச கத்தோலிக்கருக்கு யோசனை யூட்டியிருக்கின்றார். ஜேர்மனிதேச மேற்றிராணிமாரின் தலைமையில் உலகில் வளர்ச்சியுறாத தேசங்களுக்கு பெரும் பணஉதவி கிடைத்துவருவது நாம் ஏற்கனவே அறிந்த விஷயமாகும்.

ஒற்றுமைவாரத்தில் சேர 64,000 இல்லங்களைத் தரிசித்தனர்

இவ்வருடம் இங்கிலாந்திலுள்ள போட்ஸ்மத் என்னும் பிரிவில் ஒற்றுமை வாரத்தைச் சிறப்பாக நடத்தஎடுத்துக்கொண்ட ஆயத்தங்களுள் பின்வருவதும் ஒன்று. நகரைப் பல பிரிவுகளாகப் பிரித்து, பல கிறீஸ்தவ சபைகளைச் சேர்ந்த சிறு குழுக்களை நியமித்து, இக்குழுவினர் தமக்குக் குறிக்கப்பட்ட பகுதியிலுள்ள சகல குடும்பங்களையும் தரிசித்து, ஒற்றுமைவாரக் கொண்டாட்டத்தைப்பற்றி விளக்கி, அப்பகுதியில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை அவர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை அந்நிகழ்ச்சிகளில் பங்குபெறச் செய்வதே அந்த வேலையாம். இவ்வாறு அப்பகுதியில் ஒற்றுமை வாரம் தொடங்குமுன், 64,000 குடும்பங்கள் தரிசிக்கப்பட்டனவாம்.

இந்திய அரசாங்கம் திருச்சபை உதவியை கேட்கின்றது

புதுடெல்கி நகரத்தில் கத்தோலிக்கரும், புறொட்டஸ்தாந்தினரும் ஒன்றுசேர்ந்து பல சமூகத்துறைகளில் உழைத்துவருகின்றனர். இவர்களின் ஆர்வத்தையும் கெட்டித்தனத்தையும் கண்ட இந்திய அரசாங்கம், நாட்டின் உணவுப்பெருக்கு வேலையில் இவர்களுடைய ஒத்துழைப்பைக் கொடுக்குமாறு விண்ணப்பித்திருக்கின்றது.

ஒற்றுமைவார வைபவம்

கொட்டாஞ்சேனை மகா தேவாலயமாகிய சன்லூசியா தேவாலயத்தில் தைமாதம் 25ஆம் திகதி வியாழன் பிற்பகல் 5 மணிக்கு, இலங்கையிலுள்ள கிறீஸ்தவசபைப் பிரதிநிதிகள் பலர் பெருந்திரளாக அக்கோவிலிற் கூடி கருதினல் கூறே அடிகளாரின் தலைமையில் தம்மிடையே விரைவில் ஒற்றுமைகாண தேவன் அருள் புரியவேண்டுமென்று கூட்டுப்பிரார்த்தனை செய்துகொண்டனர். இத்தகைய கூட்டுப்பிரார்த்தனைகளில் கலந்துகொள்வதற்கு [illegible] திக்கான் வழிகாட்டியிருக்கிறது. பல சபையினரிடையிலும், ஒற்றுமை விரும்புபவர் பெரும்பாலோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்நாட்டுத் திருச்சபையின் முக்கிய தேவைகள்

IV — இல்லற அப்போஸ்தலர்

திருச்சபையில் துறவற அந்தஸ்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இல்லற அந்தஸ்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் என்று இருசாராராகத் திருச்சபை காலந் தொட்டு இருந்து வந்திருக்கின்றனர். அப்போஸ்தலர் நடபடிக்கைகளிலும் (11 : 19-21 ; 18 : 26) அர்ச். சின்னப்பர் எழுதிய நிருபங்களிலும் (ரோமர் 16, 1-16 ; பிலிப் 4, 3) இல்லற அப்போஸ்தலத் தொண்டைப்பற்றி நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சபை சகல மக்களினதும் இரட்சணியத்துக்காகவே ஸ்தாபிக்கப்பட்டது. அதில் அங்கத்துவம் வகிக்கும் சகல விசுவாசிகளும் அதை எங்கும் பரப்பக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றனர். "நீக்கள் போய் நான் கற்பித்த யாவற்றையும் எல்லாச் சாதியாருக்கும் போதியுங்கள்" எனறு எங்கள் மீட்பராகிய யேசுக்கிறிஸ்து நாதர் விடுத்த வேண்டுகோள் அக்காலத்து அப்போஸ்தலர்களுக்கு அல்லது சீஷர்களுக்கு, அன்றேல இக்காலத்துக்குருக்களுக்கும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளுக்கும் மாத்திரமன்று ஞானஸ்நானம் என்னும் தேவ திரவிய அனுமானத்தால் யேசுக்கிறிஸ்துநாதரின் மறையுடலாகிய திருச்சபையில் அங்கத்தவராகச் சேர்ந்த, தூய ஆவியானவரின் வாங்களால் நிரப்பப் பெற்ற பலகோடிமக்களுக்கும் இக்கடமை உரியதாயிருக்கிறது. உரிமைகளுக்கு ஏற்ற கடமைகளும் இருப்பது போலவே கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பரப்பக் கடமைகளுண்டு. பல்வேறு அந்தஸ்தில் வாழும் கிறிஸ்தவமக்கள் திருச்சபையில் பலவித சேவைகளைச்செய்து ஒரே நோக்கத்தையடைய முயற்சிக்க வேண்டும்.

இல்லற அப்போஸ்தலத்துவம் எத்தன்மையானது? ஒவ்வொரு சாதாரண விசுவாசியும் கிறிஸ்துநாதரின் போதனைக்கேற்ப வாழும் ஒரு சீரியவாழ்க்கை. ஏனையோர் கிறிஸ்துநாதரையும் அவருடைய அரிய போதனைகளையும் அறிவதற்குகந்த ஓர் அரிய சாதனமாயமைகிறது. இதையிட்டே இவ்விதக் கிறிஸ்தவர்களைப் பார்த்து, "நீங்கள் உலகத்தின் உப்பாயிருக்கிறீர்கள்"—"வெளிச்சமாய் விளங்குகிறீர்கள்"—"புளிக்காரமாய்க் காணப்படுகிறீர்கள்" என்றெல்லாம் யேசுநாதர்சுவாமி கூறியிருக்கிறார். அர்ச். பேதுருவான வரும் தமது நிருபமொன்றில் "இராச குருத்துவம்" "புனிதசாதி" என்றெல்லாம் கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

இல்லற அப்போஸ்தலமானது விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்ற (தூய ஆவியானவரின் உதவியால் ஒருவர் பெறும்) மூவித புண்ணியங்களை அடக்கியுள்ளது. தேவனின் இராச்சியத்தை இவ்வுலகில் பரப்ப அவரில் மக்கள் கொண்டுள்ள அளவற்ற அன்பின் நிமித்தம் கடமைப்பட்டிருக்கிறார்கள். தேவசிநேகமும், பிறர்சிநேகமும் (இத்தொடரில் முன்பு குறிப்பிடப்பட்டவாறு) ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப்போல நெருங்கிய தொடர்புடையன. ஒன்றில்லாமல் மற்றது இல்லை. இரண்டும் ஒருவரில் இல்லாவிடில் இரட்சணியமே இல்லை எனலாம். எனவே இல்லற அப்போஸ்தலுவம் எல்லோரின் வாழ்க்கையினதும் இன்றியமையாத அம்சமாக இருக்கிறது. எவ்வளவுக்கு இல்லற வாசிகளின் வாழ்க்கை கிறிஸ்துவின் வாழ்க்கையோடு ஐக்கியப்பட்டிருக்கிறதோ—"நானில்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது—"நானே திராட்சக்கொடி நீங்கள் அதின் கிளைகள்" என்ற வார்த்தைகள் இவற்றை நன்குவிளக்குகின்றன—அவ்வளவுக்கு அவர்களின் வாழ்க்கை அப்போஸ்தலுவம் வாய்ந்ததாய் இருக்கும். அவர்களின் வாழ்க்கையில் விசேஷமாக மறுவுலக மகிமையே—இவ்வுலகச் செல்வமல்ல—முக்கிய இடம்பெறுகின்றது. இல்லற வாசிகளின் வாழ்க்கையும் அவர்கள் புரியும் செயல்களும் ஏனையோருக்குக் கிறிஸ்துநாதரின் போதனைகளின் மகத்துவத்தையும் அவரின் அருளின் அத்தியாவசியத்தையும் எடுத்து உலகுக்குத் தெற்றென விளக்கும்.

இது ஒரு புறமிருக்க கிறிஸ்துவின் போதனைகளை—நற்செய்தியைக் கேள்வியுற்ற சகலரும் அதை ஏனைய மக்களிடையே பரப்பக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இதுதான் இல்லற அப்போஸ்தலுவத்தின் இன்றியமையாத தொண்டாயிருக்கிறது. இதையே இல்லற அப்போஸ்தல "அழைத்தல்" என்கிறோம். இச்சேவைக்குக் கிறிஸ்துநாதர் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் அழைத்திருக்கிறார். சாதாரணமக்கள் வெளிஉலகில் வாழ்த்து வருகின்றனர். அங்கேயே வாழ்ந்து அதைக் கிறிஸ்துமயமாக்குவதே அவர்களின் கடமை. இதற்கு முன்மாதிரியான வாழ்வு மாத்திரம்போதாது. சமயவாழ்வானது தம்மைத்தாமே பரிசுத்தப்படுத்துவதுடன் முடிந்துவிடுவதில்லை. எம்மைக் கடந்து எம் அயலாரிடம் செல்ல வேண்டும். பிறரிடம் கிறிஸ்துவைக் கொண்டு செல்வது ஒரு கிறிஸ்தவனின் கடமை. பிறருக்குப் பணிபுரிதற்காகத் தம்மை அர்ப்பணிப்பது துறவறத்தாருக்கு மட்டுமல்ல, இல்லறத்தாருக்குமுரியதொன்றுகும். "தம்மை அறிந்து நேசித்துச் சேவிக்கவும் அதனால் மோட்சத்தை அடையவும் தேவன் எம்மைப் படைத்தார்" என நாம் முற்காலத்தில் படித்தோம். ஆனால், அதைச் சற்றுத் திருத்தி—மாற்றி "தம்மை அறியவும், பிறர் அறியச்செய்யவும், நேசிக்கவும், பிறர் நேசிக்கச் செய்யவும், சேவிக்கவும், பிறர் சேவிக்கச் செய்யவும்" என்று தற்போது கூறவேண்டும்.

இதிலேயே இல்லற அப்போஸ்தலுவத்தின் ஆதியும் அந்தமும் அடங்கியிருக்கிறது. இரட்சணிய அலுவலில் எல்லோரும் ஒத்துழைப்பான முறையில் ஈடுபட்டுழைக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இவ்விதஇல்லற அப்போஸ்தலுவமே நம்நாட்டுத் திருச்சபையின் முக்கிய தேவைகளுள் ஒன்றுயுமிருக்கிறது.

P. S.

✝

திருமதி

ஆனசிப்பிள்ளை மரியதாஸ்

(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்கள்

அமரத்துவமடைந்த

ஞாபகம்

பிறப்பு :	இறப்பு :
5-6-1898	2-2-1967

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

இதைக் கண்ணுறும் சகலரும் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு காற்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மனைவியை இழந்து துயருறும்
எஸ். எஸ். மரியதாஸ்
(இளைப்பாறிய ஜெயிலர்)

தாயை இழந்து துயருறும் மகன்
M. J. [illegible] B. A. (Lond.)
(Principal, University College, Colombo.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையின் செம்மல்

ஆனிமாதம் 4-ந் திகதி 1897-ம் ஆண்டுச் சரித்திரத்திலே பிரசித்தி பெற்ற ஒருநாள். வானம் வெளுத்தது. சூரியன் தன் கதிர்களை மெல்லப் பரப்பிக் கொண்டிருந்தது. சூரியன் வருகையினால் பட்சிகள் ஆரவாரித்தன. கடவுள் பக்தியிலே பெயர்பெற்ற மட்டுநகரிலே அன்று பிறந்தார் அப்பெரியார். அவர் சாதாரண குழந்தைகளைப்போல அழுதார், விளையாடினர், சாப்பிட்டார், வளர்ந்தார். ஆனால் அவர் ஒரு யேசுசபைக் குருவாய் வருவார் என்று அன்று ஒருவரும் நினைக்கவில்லை, ஏனெனில் அவர் அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த தம்பதிகளிடமிருந்தே பிறந்தார்.

அவரது அண்ணர் அங்கிலிக்கன் சபைப் போதகராயிருந்தார் அக்காலத்தில். அப்போதனையில் அவருக்குத் திருப்தி ஏற்படாததினால் உண்மையான வேதத்தைக் கண்டடைய முயற்சித்தார். அம் முயற்சியின் பயனாக அவர் ஒரு கத்தோலிக்க மதத்தவரானர். அண்ணர் மனமாற்றத்தைக் கண்ட தம்பியும் கிறீஸ்தவ வேதத்தின் உண்மையைக் காணத் துடியாய்த் துடித்தார். கடைசியில் அவரும் ஒரு கிறீஸ்தவரானர். தை மாதம் 6-ந் திகதி 1917-ம் ஆண்டு இப்படி மனம்மாறியவர் வேறு யாருமல்ல இன்று இலங்கை யேசுசபைத் தலைவராயிருக்கும் இம்மானுவல் கிறவுதரேயாவர். இவ் வரலாற்றை அவரிடமிருந்தே கேட்டறிந்தேன். மற்றவர்களும் இதைக் கேட்டறிந்து, வாசித்தறிந்து பயனடையலாமென்றே எழுதுகின்றேன்.

இம்மானுவேல் கிறவுதர் சுவாமியார் மார்சி மாதம் 1-ந் திகதி 1918-ம் ஆண்டு யேசுசபையிற் சேர்ந்தார். யேசு சபையில் படிக்க வேண்டிய யாவற்றையும் ஐயக்திரிபறக் கற்று 1927-ம் ஆண்டு கார்த்திகை 21-ம் நாள் யேசுசபைக் குருவாக உயர்த்தப்பட்டார். 1935-ம் ஆண்டில் சுத்திகரத் திருநாளன்று கடைசி வார்த்தைப்பாட்டின் மூலம் தன்னைத் தானே மரியாயின் மூலம் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். பின்பு அவர் மிக்கேல் தூதன் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினர். புனித மிக்கேல் தூதன் கல்லூரித் தலைவராகவும் பணியாற்றினர். திருகோணமலை யேசுசபைத் தலைவராயிருக்கும் போது, காலியில் உள்ள யேசுசபையும் ஒன்றுய்க் கூட்டப்பட்டது. அப்பொழுதும் இவரே இலங்கை யேசுசபையின் தலைவராகவும் நியமனம் பெற்றார். இன்றும் அதே பதவியில் இருந்தே கடமையாற்றி வருகிறார். எப்பொழுதும் இனிமையாய்ப் பேசுவதும், புன்முறுவலுமே இவரிடம் காணப்படும்.

ஐம்பது வருடம் யேசுசபையில் சேவைசெய்த இம்மானுவேல் கிறவுதர் அவர்களை நாம் எல்லோரும் வாழ்த்துவதுடன், இன்னும் அதிக காலம் சேவைசெய்ய இறைவனைப் பிரார்த்திப்போம்.

பாக்கியம்.

இல்லையேல் ....?

காதல் இல்லையேல்—உலகங்
காய்ந்து போய் விடும்
மாதர் இல்லையேல்—வாழ்வு
மணம் இழந்து விடும்.

உறவு இல்லையேல்—மன்பதை
உயிர் இழந்து விடும்
துறவு இல்லையேல்—பொதுத்
தொண்டு செத்து விடும்.

பண்பு இல்லையேல்—உலகம்
பாழாய்ப் போய் விடும்
அன்பு இல்லையேல்—வாழ்வின்
ஆக்கஞ் செத்து விடும்.

உறுதி இல்லையேல்—செயலில்
ஊனம் வந்து விடும்
பொறுதி இல்லையேல்—எங்கும்
பூகம்பந் தோன்றி விடும்.

உரிமை இல்லையேல்—உலகம்
ஊமையாய்ப் போய் விடும்
வறுமை இல்லையேல்—பூமி
வானகம ஆகி விடும்.

சட்டம் இல்லையேல்—நாடு
சண்டையில் மூழ்கி விடும்
திட்டம் இல்லையேல்—எல்லாம்
சிதைந்து போய் விடும்.

அறம் இல்லையேல்—மறம்
அரியணை ஏறி விடும
திறம் இல்லையேல்—வாழ்வு
சீரழிந்து போய் விடும.

முயற்சி இல்லையேல்—வாழ்வு
முடங்கிப் போய் விடும
உயர்ச்சி இல்லையேல்—எதிலும்
ஊக்கங் குன்றி விடும.

எஸ். அரியரெத்தினம்

✝

அந்தோனியாப்பிள்ளை டொறின் ருணி

அவர்களின்

1-ம் வருட மரணஞாபகம்

தோற்றம் :	மறைவு:
22-6-65.	31-1-67

"ஆண்டொன்று மறைந்த போதும் மகளே உன்முகம் மறந்தாள் இல்லை; பேசுகின்ற மதுரமொழி சிரிப்பு தோற்றம் பிஞ்சு கடை நெஞ்சினிலே எரியுதம்மா; ஆசையுடன் எமை அணைத்த அரியசெல்வி அன்புவிழி எண்ணி எண்ணி அழுது கொந்தோம்; யேசுவிடம் எமக்காகப் பரிந்துபேசும் என்றோர்நாள் உமை வந்து சேர்வோம் கண்டீர்."

எங்கள் குடும்பத்தின் மத்தியில் சூரியனைப்போல் பிரகாசித்து எதிர்பாராமல் மரணத்திரையில் மறைந்த டொறின் ருணி சகல சம்மனசுக்கள் கூட்டத்துடன் சேர்ந்து வல்ல தேவனை வாழ்த்துவாவாக.

அருமை ஏக புதல்வியை இழந்து ஆறுதல் அற்றிருக்கும் பெற்றோர் :

சிங்கராயர் யோண் அல்பிறற், றோஸ் லினிவிறேற் மேசி.

சகோதரர்கள் : அன்ரனி கிறகோரி டொறிங்ரன், சில்வேஸ்ரர் வெலிங்ரன், மற்றும் உறவினர்கள்.

கஷ்டம்ஸ் வீதி,
ஊர்காவற்றுறை.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச்.சூசையப்பர், அர்ச். செபஸ்தியார், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்முட்டு உதவியால் நான்கேட்ட வேண்டுதல் அனுகூலமானது. அவர்களுக்குத் தோத்திரமாக இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

தேத்தாப்பளை

"உலகில் யேசுக்கிறீஸ்துவைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை; யேசுக்கிறீஸ்துவில் அவருடைய பலியைவிட உயர்ந்தது எதுவுமில்லை. அவரது பலியில் இறுகிமூச்சு, அவருடைய திருவுடலிலிருந்து ஆன்மா பிரிந்தஅந்த முக்கிய வேலையைவிட உயர்ந்தது யாதுமில்லை.

—போசுவே

செபமாலை செபிக்கும் சேவனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.

— 11-ம் பத்திநாத பாப்பரசர்

உள்நாட்டுச் செய்திகள்

திரு. சி. குமாரசாமி அவர்கள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாகவும், அரசாங்க அதிபராகவும், இந்தியாவிலே இலங்கையின் ஹைகமிஷனராகவும் கடமைபார்த்து இளைப்பாறியிருந்தவரான திரு. சி. குமாரசாமி அவர்கள் சென்ற புதன்கிழமை காலை கொழும்பிலே காலஞ்சென்ற ரென அறியவந்து மனம்வருந்தலானோம்.

சுதந்திரதின விழா

இலங்கை சுதந்திரமடைந்த இருபதாம்ஆண்டு நிறைவுதினம் வருகிற மாசி மாதம் 4ஆம்தேதி வருகின்றது. இம்முறை சுதந்திரதினவிழா திருகோணமலையில் அதிகாரபூர்வமாகக் கொண்டாடப்பட விருக்கிறது. அங்கு இதனை அதிகம் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. அன்று திருகோணமலை முற்ற வெளி மைதானத்தில் அணிவகுப்பு நடைபெறுமென்றும், ஏனையகலை நிகழ்ச்சிகளும் டொக்யார்ட்டுக்குள்ளேயே நிகழுமென்றும் தெரியவருகிறது. சுதந்திர இருபதாம்வருட நிறைவின் ஞாபகார்த்தமாக ஒருரூபா, ஐந்து சதம் பெறுமதியான இருபுதியதபால் முத்திரைகள் மாசிமாதம் 2ஆம்திகதி பாவனைக்கு வெளியிடப்பட விருக்கின்றன.

குடியேற்ற திட்டங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பன்னூற்றுக்கணக்கான மக்கள் இவ்வருடத்தில் குடியேற்ற திட்டங்களில் குடியேற்றப்பட விருக்கின்றார்கள். அம்பலப்பெருமாள் குளத்திட்டத்தின் கீழ் 300 குடும்பங்களும், விசுவமடுக் குளத்திட்டத்தின்கீழ் 100 இளைஞர்களும் முத்தையன்குளத் திட்டத்தின் கீழ் 100 பேர்களும குடியேற்றப்பட விருக்கிறார்கள்.

கிராமாபி விர்த்திப் பயிற்சி

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களிலே கடமையாற்றும் கிராமசேவகர்களுக்குக் கிராமாபிவிருத்தி சம்பந்தமானபயிற்சி வருகிற மாசி மாதமுதல் அளிக்கப்பட விருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சுமார் 180 கிராமசேவகர்களும், மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து சுமார் 125 கிராமசேவகர்களும் இப் பயிற்சியில் கலந்துகொள்வார்கள், இவர்கள் பகுதிபகுதியாகவே பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்.

இடமாற்றச் செலவு

தனதுஊழியர்களை இடமாற்றம் செய்வதில் வருடந்தோறும் அரசாங்கத்துக்கு 1கோடியே 50லட்சம்ரூபா செலவாகின்றது. ஆண்டுதோறும் 40,000 அரசாங்கஊழியர்கள் இடமாற்றஞ்செய்யப் படுகின்றார்கள். இவர்களுக்குப் புகையிரத வாறண்டுகள், மற்றும் போக்குவரத்துகளுக்கென ஒன்றரைக்கோடிரூபா செலவிடப்படுகிறது. மேலும் வருடம்ஒன்றுக்கு அரசாங்கசேவையில் அமர்த்தள்ளவர்களுக்கு வழங்கப்படும் இலவசப்புகையிரத வாறண்டுகளுக்கென மேலதிகமாய் ஒன்றரைக்கோடிரூபா செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு மனிதகண்

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு மனிதகண்கள் அனுப்புவதைத் தடைசெய்யச் சுகாதாரமந்திரி காரியாலயம் முடிவுசெய்திருக்கிறது. இலங்கையில் நடைபெறும் கண்சத்திர சிகிச்சைகளுக்குப் போதியகண்களைப் பெற்றபின்னரே வெளிநாடுகளுக்குக் கண்களை அனுப்ப மீண்டும்அனுமதிவழங்கப்படும். மேலும் தனியார் தாறை டக்ர்மாருக்கு இலவசமாக மனிதகண்கள் வழங்குவதும் தடைசெய்யப்படவிருக்கிறது.

பயங்கர தீ விபத்துகள்

பெலியகொடையிலுள்ள பிரபலயானைப்பெட்டித் தொழிற்சாலையில் சென்ற 18ஆம்திகதி பயங்கரமான ஒரு தீவிபத்துஉண்டாகி அதில்36பேர்காயமடைந்தனர். இவர்களில் 25பேர் கடுமையான எரிகாயங்களுக்குள்ளாயினர். ஐந்துபேரின்நிலை அதிகமகவலைக்கிடமானதாய் இருக்கின்றதாம். இந்தவிபத்தால் பெருந்தொகையான தீக்குச்சிகளும் எரிந்துநாசமாயின. ஹோமகமவிலுள்ள இலங்கைப்போக்குவரத்துச்சபை டிப்போவில் சென்ற 17ஆம்திகதி திடீரெனப் பயங்கரதீ மூண்டபோது அதனை அணைக்கமூன்று மணிநேரம்சென்றது. இதிலே பஸ்ஒன்றும், பழுதடையும்பஸ்களை இழுத்துப் பறிக்கும் வண்டிஒன்றும், லேலைத் தளம்ஒன்றும் எரிந்துநாசமாயின. இவ்விபத்தினால் சுமார்ஒருலட்சம்ரூபா சேதம்விளைந்திருக்கலாமென உத்தேசிக்கப்படுகிறது.

லங்காமாதா திருநாள்

இலங்கையின் பாதுகாவலாளியான லங்காமாதாவின் வருடாந்தத்திருநாள் வழமைபோலத் தேவத்தையிலுள்ள தேசியதிருசேத்திரத்தில் வருகிறமாசி மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளாகிய இருதினங்களிலும் கொண்டாடப்பட விருக்கிறது. இம்மாதம் 26ஆம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்4மணிக்குக் கொடியேற்றத்துடன் நவதினஉற்சவங்கள் ஆரம்பமாகவிருக்கின்றன.

பௌத்த தலைவர் பாராட்டுகின்றார்

உலகசமாதானத்தை உண்டுபண்ணுமாறு பரிசுத்தபாப்பரசர் எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சிகளையிட்டு அகிலமுழுவதுமே அவருக்கு என்றும் நன்றியுள்ளதாய் இருக்குமென்று மாதம்பைப்பகுதிகளிலுள்ள கிராமாபி விருத்திச் சங்கங்களின் தலைவரும், ஒரு பௌத்தபிரமுகருமான திரு.பி.ரி. எச். குணவர்த்தன அவர்கள் அப்பகுதிகளிலே வெள்ளத்தாலும், சூறாவளியாலும் பாதிக்கப்பட்ட வறியமாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலைப் புத்தகங்கள் வழங்கும் வைபவமொன்றுக்குத் தலைமைவகித்துப் பேசியபோது கூறியிருக்கின்றார். மேலும் இலங்கையிலுள்ள மக்கள் தங்களிடையேயுள்ள சிறியவேற்றுமைகளைமறந்து லங்காதுவீபத்திற்கு நிறைந்தசமாதானத்தைக் கொண்டுவருமாறு அதிகமான உணவுப்பொருள்களைச் செய்கைபண்ணவேண்டுமென்றும் புத்திமதி கூறினார்.

அரிசிக்கப்பல் வந்தது

இந்தியாவிலே சமீபத்தில் ஏற்பட்ட அரிசிபற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக இங்குவந்த அரிசிகப்பல்ஒன்றை இலங்கை இந்தியாவுக்கு அனுப்பியது. இத்தக்கடனைத்திருமபச செலுத்துமுகமாக அதன்ஒருபகுதியாய் இந்தியா அனுப்பிவைத்த அரிசிக்கப்பல்ஒன்று 3,275தொன் பர்மாஅரிசியுடன் யாழ்ப்பாணம்வந்துசேர்ந்துள்ளது. இந்த அரிசியை இறக்கும்வேலை துரிதமாக நடைபெற்றுவருகின்றது.

நாசமடைந்த தீப்பெட்டிகள்

பெலியகொடையிலுள்ள யானைமாக் தீப்பெட்டித்தொழிற்சாலையில் சென்ற 18ஆம்திகதி ஏற்பட்ட பெருந்தீவிபத்தினால் சுமார் இரண்டுலட்சம்தீப்பெட்டிகள் எரிந்துநாசமாயின. இத்தொகை அத்தொழிற்சாலையிலே தினம்ஒன்றுக்குச் செய்யப்படும் தீப்பெட்டிகளில் மூன்றில் ஒருபங்கென்று சொல்லப்படுகிறது. அதனால் 7,000ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

புதிய தபால் முத்திரைகள்

இலங்கையின் இருபதாவது சுதந்திர தினத்தைமுன்னிட்டு அடுத்தமாசி மாதம் 2ஆம்திகதியன்று இருவிசேட தபால்முத்திரைகள் பாவனைக்கு வெளியிடப்பட விருக்கின்றன. இவைகள் ஐந்துசதமுத்திரைகளாகவும், ஒருரூபா முத்திரைகளாகவும் வெளிவரும். இவற்றிலே சுதந்திரமண்டபமும், தேசியக் கொடியும் பொறிக்கப்பட்டிருக்கும்.

விவசாய மன்னர்கள்

இலங்கையிலே கிராமாதிகாரிகளின் பிரிவுகளிலே நெல்வேளாண்மையில் மேம்பட்டுவிளங்கும் விவசாய மன்னர்களின் நெற்செய்கைப் பெருக்கத்தை மதிப்பிட்டுத் தங்கப்பதக்கங்கள், கிருமி ஒழிப்பு மருந்துதெளிக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர் றேடியோக்கள், சைக்கிள்போன்றவைகள பரிசில்களாக வழங்கப்படவிருக்கின்றன. கிராமாதிகாரிகளின் பிரிவுகளில் போட்டியிட்டு வெற்றியிட்டும விவசாய மன்னர்கள் அரசாங்க அதிபர்களது பிரிவுகளின் பொதுப் போட்டியில்கலந்து முதன்மை பெறவேண்டும். இவ்வாறு 22மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் முதன்மை பெறும் முதல்மூன்றுபேருக்கும் முதலாவதுபரிசாகத தங்கப்பதக்கமும், மருந்துதெளிக்கும் கருவியும், இரண்டாவதுபரிசாக டிரான்சிஸ்டர் றேடியோவும், மூன்றுவதுபரிசாகச் சைக்கிளும் வழங்கப்படும். இப்பரிசுகளுக்கென 40ஆயிரம்ரூபா செலவாகும்.

மாணவஆசிரியர்நியமனம்

1966ஆம்ஆண்டு ஐப்பசிமாதம் நடந்தேறிய மாணவஆசிரியர்பரீட்சையில் சித்தியடைந்த சுமார்3,000பேருக்கும் வருகிறபங்குனிமாதமுதல் நியமனம் வழங்கப்படவிருக்கிறது. இந்தநியமனத்தை முன்னிட்டு வருகிறசித்திரைமாதம் நடைபெறவிருந்த மாணவஆசிரியர் பரீட்சை ஆவணிமாதத்திற்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

ஏக்கருக்கு 45 புசல்நெல்

இலங்கையிலே இப்பொழுது ஏக்கருக்குச் சராசரிவீதமாக 42புசல்நெல் விளைகின்றது. இதனை 45புசலாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. இதற்கென 2,500பெண்விவசாயிகளை கவீனவிவசாய முறையில் பயிற்றியெடுக்க முயற்சிநடைபெறுகின்றது.

கிளிநொச்சியும் பெரும்போகமும்

கிளிநொச்சிப்பகுதியிலே இந்தப் பெரும்போகவேளாண்மையில் 20,000 ஏக்கர்களில் நெல்விதைக்கப்பட்டிருக்கிறது. இந்தவயல்களுக்கு இரணமடுக்குளத்திலிருந்து நீர்ப்பாசனவசதி செய்யப்படவிருக்கிறது. இரணமடுக்குளத்திலிருந்து 82,000ஏக்கர்வயல்களுக்கு நீர்ப்பாசனவசதி அளிக்கலாம். அதனால் பெரும்போக நெல்வேளாண்மைக்குத் தேவையானநீர்மாத்திரமல்ல, அடுத்தசித்திரையில் மழை பெய்யாவிடினும் சிறுபோகவேளாண்மைக்கும் போதியநீர் இருக்கின்றது. இப்பொழுது விதைக்கப்பட்டிருக்கும் 20,000ஏக்கர்வயல்களிலும் 8,00,000 புசல்நெல் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

விதைநெல்பண்ணைகள்

விதைநெல் தட்டுப்பாட்டைச் சமாளிக்குமுகமாக மாவட்டஅடிப்படையிலே விவசாயப்பகுதிநாட்டின் பல்வேறுபகுதிகளிலும் விதைநெல் பண்ணைஅமைக்க நடவடிக்கைஎடுத்துவருகிறது. சென்றஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசியஉணவுப்பொருள் செய்கை ஆலோசனைக்கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

● இத்தாலியின் தென்கோடியிலுள்ள சிசிலிதீவில் சென்ற 16ஆம் திகதி உண்டான பயங்கர பூகம்பத்தினால் அதன் மலையடிவாரத்திலிருந்த இருசிறு நகரங்கள் தரைமட்டமாயின. இப்பூகம்பத்தில் 500பேருக்கு மேல் உயிர்மாண்டதாகவும், 1,000 பேர்வரை காயமடைந்திருப்பதாகவும் அங்குள்ள பலாமோ நகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

● பிரித்தானிய அரசாங்கம் தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துமுகமாகத் தனது உலகஇராணுவ பலத்தைக் குறைக்கவிருக்கிறது. அதனால் ஹொங்கொங், பார்கேக்குடா ஆகியன உட்படத் தூரகிழக்கு நாடுகளிலுள்ள தனதுபடைகளைத் திருப்பி அழைத்துக் கொள்ள ஆயத்தப்படுகின்றது. 50-எவ்-III இன விமானங்களைக் கட்டுவதற்கென அமெரிக்காவுக்கு அளித்திருந்த ஆடரையும் நிறுத்திவிடப்போகின்றது.

● சந்திரனை அளப்பதற்கென்று அமெரிக்கா சென்ற செவ்வாய்க்கிழமை விண்வெளிக் கப்பல்ஒன்றை அனுப்பியிருக்கிறது. அளவைக்கருவிகள்இணைக்கப்பட்ட ஆளில்லாத ஒரு விண்வெளிக் கப்பல் இதுவாகும். சந்திரனை அளப்பதற்கென அனுப்பப்பட்டுள்ள முதலாவது விண்வெளிக்கப்பலும் இதுவேயாகும்.

● உலகிலேயே முதன்முதலாக ஜப்பானில் ஓர் இன்சூரன்ஸ் கம்பெனி நாய்களுக்கும் இன்சூரன்ஸ் வழங்கத் தொடங்கியிருக்கிறது. இன்சூரன்ஸ் கட்டணம்கட்டியதுமுதல்நாயின் சகல சௌகரியங்களையும் கம்பெனியே கவனித்துக்கொள்ளும். நாய்க்குச் சுகவீனம் ஏற்பட்டால் டக்ரின் செலவை அது கட்டும். நாய்க்கு விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு கொடுக்கும். நாய் இறந்துவிட்டாலோ இன்சூரன்ஸ் தொகைமுழுவதையும் கட்டிவிடும்.

● சந்திர மண்டலத்துக்கு மனிதரை அனுப்புமுன் சிலபரீட்சார்த்த விண்வெளிப் பிரயாணங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்தமுன்வந்துசென்ற 21ஆம்திகதி முதலாவது பரீட்சார்த்த பயணத்தில் உண்மையான மனிதருக்குப்பதில்மனிதரைப்போன்ற 'ரோபட்'எனப்படும் செயற்கைப்பொம்மைகளைப் பயன்படுத்தி விண்வெளிப் பிரயாண கப்பல்ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

● 1814-ம் ஆண்டு நெப்போலியச் சக்கரவர்த்தி தனதுதோப்பி கடலில் விழுந்தபோது அதனைக் கடலில் நீந்திச்சென்று எடுத்துக்கொடுத்த வள்ளக்காரனுக்கே அதைப் பரிசாகக் கொடுத்துவிட்டார். இந்தத் தொப்பி பரீஸ்நகரிலே சமீபத்தில் 60,000 ரூபாவாக ஏலத்தில் விலைப்படலாயிற்று.

● பரித்த பாப்பரசர் சென்ற 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை வல்லரசுகளுக்கு விடுத்த ஒரு வேண்டுகோளில் வியற்னும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்குச் சாத்தியமானதையெல்லாம் செய்யுமாறு வற்புறுத்தியிருக்கின்றார். வியற்னும் யுத்தம் மேலும் பரந்து ஓர் உலகயுத்தமாக வெடிக்காதுபார்த்துக்கொள்ளுமாறும அவர் கேட்டிருக்கின்றார்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 28-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (போயாவுக்கு முன்தினம்) பி.ப. 4 மணிக்கு சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் ஆரம்பமாகி கடந்தேறும். எல்லோரும் நேரகாலத்தோடு சமூகமளிக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

A. S. FRANCIS of MARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பூசை வழிகாட்டி

தை — 1968

28 ஞா. திருக்காட்சி விழா. பின் 4-ம் ஞாயிறு [ப]
29 தி. அ. பிரான்சீஸ்கு சலே. [வெ]
30 செ. அ. மார்த்தினம்மாள் [சி]
31 பு. அ. போஸ்கோ அருளப். [வெ]

மாசி மாதம்

1 வி. அர்ச். இஞ்ஞாசியார் [சி]
2 வெ. அர்ச். கன்னிமரியின் சுத்திகர விழா [வெ]
3 ச. சனிக்கிழமையில் அர்ச். மரியன்னையின் பூசை [வெ]

சத்தியவேத பாதுகாவலன்

1968-ம்வரு தைமீ 27-ங்வ

பணிபுரியும் திருச்சபை

சமீபத்தில் பிரஸல்ஸ் நகரில் 13 அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து தேசிய சமாதான நீதிக்கமிஷன்களின் பிரதிநிதிகள் கூடியபொழுது மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் கத்தோலிக்க திருச்சபை உலக மக்களின் ஆன்மீக நலனில் மட்டுமல்ல அவர்களது சரீரநலனிலும் அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு ஓர் அத்தாட்சியாகும். செல்வம் மிக்க நாடுகள் அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு தமது வருமானத்திலொரு பகுதியைக் கொடுத்துதவி நாடுகளுக் கிடையில் நீதி வழங்க வசதிகள் செய்யவேண்டும் என்பதோடு திருச்சபை மற்றக்கிறிஸ்தவர்களோடு ஒன்றுபட்டு இந்தவேலையில் ஈடுபட வேண்டும் என்பதையும் பிரதிநிதிகள் எடுத்துக் காட்டினர்.

மகாநாட்டில் பேசிய அதிமேற்றிராணியார் பெனெலியும் கருதினால் சுயனென் ஸும் இன்று உலகில் வறுமையால் வாடும் மனுக்குலத்தின் துன்பத்தைத் துடைப்பதற்கு திருச்சபைதனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமெனவும், பிரச்சினை மிகப் பெரிதாயிருப்பதால் அதைத் தீர்க்கும் பணியில் திருச்சபை தனது முழுத்திறமையையும் வசதிகளையும் உபயோகிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தியிருக்கின்றனர்.

ஏழைகள் பாமரரின் வாழ்வுக்கு வழி வகுப்பது திருச்சபைக்கு ஒரு புதிய காரியமல்ல. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வேதபோதகம் ஆரம்பித்த நாட்தொட்டு திருச்சபை மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளை யாவரும் அறிவர். கல்வியைப் பெருக்கப் பாடசாலைகள், நோயுற்றோருக்கு வைத்திய வசதிகள், திக்கற்றோருக்கு அநாதை மடங்கள், ஏழைகளுக்கு நேரடியான பொருளுதவி என பல்வேறு வழிகளில் திருச்சபையின் பொருட்செல்வமும் ஆட்பலமும் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், அன்று திருச்சபை இவையெல்லாம் தனது வேதபோதகப் பணிக்கு உதவும் வழிகள் எனக் கருதியதேயன்றி சரீர துன்பங்களை நீக்குவது தனது கடமைகளுள் ஒன்றெனக் கருதவில்லை. ஆகவே இத்தகைய பணிகள் யாவும் வேதபோதகத்தோடு கைகோர்த்தே சென்றன. இதனால் வேதபோதகம் ஓரளவுக்கு வெற்றியடைந்ததெனினும் அதனால் சில தீங்குகளும் இருந்தன. குறிப்பாகப் பிறமக்கள் திருச்சபை செய்யும் காரியங்களை சந்தேகக் கண்கொண்டு நோக்கத்தொடங்கினர். அறிவும் சுதந்திர உணர்வும் தலைதூக்கத் தொடங்கியபின் எதிர்ப்புக்கள் பல பக்கங்களிலிருந்தும் கிளம்பின. திருச்சபை பிறர் மத்தியிற் பணி செய்வதற்குப் பலமுட்டுக்கட்டைகள் ஏற்பட்டன.

சமீபத்தில் திருச்சபையானது தன்னை சகல விதத்திலும் புதுப்பித்தபோது தன்னை ஊழியம் புரியும் திருச்சபை என வெளிப்படுத்தியது. சாதிமத வேறுபாடுகளைக் கருதாது, பிரதிபலனை எதிர்பாராது இன்னற்படுவோரின் துயர் களைவதை தனது கடமைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளது பணிபுரியும் திருச்சபை.

முன்பு ஏனைய மதஸ்தாபனங்களுடன் போட்டியாக மக்களைத் தம் வசப்படுத்தும் நோக்கத்தோடு நற்பணிகள் செய்யப்பட்டன. ஆனால் இன்று மக்கள் நன்மைக்காகப் பாடுபடும் எந்த ஸ்தாபனத்துடனும் திருச்சபை ஒத்துழைக்க ஆயத்தமாக இருக்கிறது. ஐ. நா. சபை, ஏனைய மதஸ்தாபனங்கள், நிறுவனங்கள் செய்யும் ஆக்கமுயற்சிகளுக்கு ஆதரவு தருவதோடுதான் அவற்றோடு ஒன்றித்து உழைப்பதால் கூடிய அளவில் நன்மை செய்யக் கூடுமெனவும் உணர்ந்திருக்கின்றது. இத்தகைய பணியால் திருச்சபை பிறரின் சந்தேகக்கண்களுக்கு ஆளாகாமல் சகல மக்களின் நல்லெண்ணத்தையும் பெற ஏதுவாகிறது.

மக்களாகப் பிறந்த சகலரும் ஒரு புது ஆண்டு ஆரம்பித்ததும் தங்கள் இலட்சியங்களுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்பப் பலதரைகளிலும் பற்பல தீர்மானங்களை எடுத்து வாழ்வது இயல்பு. இவ்வாறு மக்கள் பலவேறு தீர்மானங்களை எடுத்தபோதிலும் அவற்றிற்கிணங்க அவற்றைச் சுமுத்திரையாய்க் கடைப்பிடித்து ஒழுகுபவர் சிலரே. ஏனெனில், இவ்வாறு செய்வதற்குத் திடசித்தமும் விடாமுயற்சியும் (இறைவன் அருளுடன்) வேண்டற்பாலனவே. என்றாலும், "நான் ஒவ்வொரு தரையிலும் ஒவ்வொரு தினமும் முன்னேறிக்கொண்டு வருகிறேன்" எனும், பிரான்சுதேசத்து உளவியல் விற்பன்னராம் கூவ என்பவர் கூறியவாறு, நீண்டகாலம் வாழவேண்டிய மக்கள், இப்புதுவருடத்தில் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளையும், தாங்கள் அமல் செய்யவேண்டிய நிட்டங்களையும் வகுத்து அவற்றை அழமாகத் தங்கள் உள்ளத்தில் பதித்து உறுதியாக உழைக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் இத்தீர்மானங்களைத் தனிப்பட்டவை, பொதுவானவை, சமூகத்தோடு தொடர்பானவை, சமயத்தோடு சம்பந்தமானவை என்று காலு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தனிப்பட்ட தீர்மானங்கள்: இவை பொதுவாக ஒருவரின தனிப்பட்ட அக்கஸ்தக்கேற்றவையாக இருக்கும். தான் செய்யும் தொழிலை மிகவும் திறமாகவும் திருப்தியாகவும் செய்வதாக ஒருவர் தீர்மானம் செய்யலாம். உதாரணமாக: ஒரு (பாடசாலை) மாணவன் தன் கல்வியில் கூடுதலான கரிசனையெடுத்து அனுதினமும் (இரவு அல்லும் பகலும்) அதில் முழு ஆர்வத்துடனும் ஈடுபட்டுத் தன வகுப்பில் முன்னேற்றமும், தனது பரீட்சையில் சித்தியும் அடையமுயற்சிப்பர்.

காரியாலயம் ஒன்றில் சேவைசெய்யும் ஒருவர் தன காளாந்த கடமைகளை ஊக்கத்துடனும் நேர்மையுடனும் செய்வதாகத் தீர்மானித்து அதன்படி ஒழுகுவார்.

ஒரு தந்தையானவன் தன் குடும்பத்தின முழுப்பொறுப்பையும் தானே கையேற்று வீணவிரயங்களைத் தவிர்த்துத் தன மனைவிமக்களை அன்பு ஆதரவுடன் பரிபாலித்துப் பாதுகாத்துவர எத்தனிப்பர்.

ஒரு தாயானவள் தன் குடும்பத்துக்குத் தேவையான பலவித தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு — உணவு, உடை, சுகாதாரம் ஆதியவற்றில் கவனமெடுத்து—சிக்கனமாகவாழ அயராது உழைக்கப் பார்ப்பாள்.

இவ்விதமான தனிப்பட்ட தீர்மானங்களைப்போலவே பொதுத் தீர்மானங்களையும் சிலர் கைக்கொண்டு ஒழுகுவர்.

ஒருவர் தன் கிராமம், சூழல் போன்றனவற்றின் முன்னேற்றத்திற்காகத் தன்னலியன்ற சேவைகளைச் செய்து தனது கிராமத்தையோ சூழலையோ முன்னேற்ற ஆவனசெய்ய முயல்வர். வேறு சிலர் கிராம முன்னேற்றச் சங்கம்போன்ற நிறுவனங்களில் அங்கத்துவம் வகித்துச் சமூக சேவைகளையும் தருமசேவைகளையும் செய்ய முன்வருவர். சாதாரண மக்களுக்குச் சமூகத்துறையிலும் பலவித கடமைகள் உண்டு. இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற அசமந்த கொள்கையையுடையராய் மக்கள் வாழ்ந்துவந்தால் எக்காலும் முன்னேறமுடியாது. உரிமைகளுக்கு வாதாடுபவர்கள் தங்களுக்குரிய கடமைகளை என்றும் மறந்தலாகாது. உண்மையாகவே கடமைகளின்றி உரிமைகளில்லை எனலாம். எனவே, பாராளுமன்றப் பொதுத்தேர்தல நிகழ்ச்சிகளிலும் உள்நாட்டு ஆட்சி மன்றங்களிலும நீதம் நிறமை, தகமை, அறிவுக்கும்ஏற்ப மக்கள் பங்கெடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இக்கடமையைப் பல மக்கள் அலட்சியம் செய்வதன்காரணமாகத் தகுதி, நிறமை, அற்றல் அற்ற பல மக்கள் ஆட்சிப்பீடங்களிலமர்ந்து பலவித இன்னல்களை ஏனையோர்க்குச் செய்யமுடிகின்றது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நியூயோர்க் நகர ஆண்டகை

கர்தினல் ஸ்பெல்மனுக்கு ஜனதிபதி அஞ்சலி

நியூயோர்க் நகரத்தில் கத்தோலிக்க அதி மேற்றிராணியாராக விருந்த கருதினல் பிரான்சிஸ் ஸ்பெல்மன் அவர்கள் சென்ற டிசம்பர் 2-ம் தேதி சனிக்கிழமையன்று மாரடைப்பினல் இறந்து விட்டார். மறைந்துவிட்ட கருதினல அவர்களுக்கு ஜனதிபதி ஜோணசன் அவர்களும், ஐக்கியநாடுகள் சபையில் அமெரிக்காவின நிரந்தரப் பிரதிநிதியாகவிருக்கும் ஆர்தர் கோல்டு பேர்க அவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

கர்தினல் ஸ்பெல்மன் அவர்களுக்கு இப்பொழுது 78வயதாகிறது. அமெரிக்க மக்கள் அனைவரும் மறைந்த கர்தினலுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர். கத்தோலிக்க மதகுருவாக இருந்தபோதிலும் கர்தினல் ஸ்பெல்மன் அவர்களுக்கு அமெரிக்க மக்கள் அனைவரும் விசேடமான மரியாதை செலுத்தி வந்தனர்.

ஜனதிபதி ஜோண்சன் விடுத்துள்ள அறிக்கையில் கருதினல் ஸ்பெல்மன் அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டியிருக்கிறார். "உலக ஆபாசங்களில் உழலும் மக்களின் இதயங்களைத் துடைத்துச் செமமையாக்கி, பரிசுத்தமாக்கியிருக்கிறார். உண்மை, தர்மம், கருணை முதலியவற்றில் மக்கள் நாட்டம்கொள்ள வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டிருக்கிறார்" இவ்வாறு ஜனதிபதி கூறுகிறார். தூதர் கோல்டுபேர்க அவர்களும் கர்தினலின் சேவையைப் பாராட்டியிருக்கின்றார்.

அமெரிக்க செய்தி

புத்தாண்டுத் தீர்மானங்கள்

— பி. சவரிமுத்து —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் மன்றம்

அன்புநிறை சோதரிகளே! வணக்கம்!

புதிய ஆண்டில் புதிய வகுப்புகளில் புத்தம்புதிய புத்தகங்கள், அப்பியாசப் பிரதிகளுடனும், புத்துணர்ச்சியுடனும் கல்விகற்க ஆரம்பித்த உங்கள் அன்புச் சிறார்கள் காளடைவில் "பழபகுருடி கதவைத்திறவடி" என்றபடி கல்வி கற்பதில தளர்த்துபோகத் தொடங்கிபிருப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். ஆரம்பத்தில் அவர்களைப்பற்றி அக்கறை எடுத்துக்கொண்ட நீங்களும் வீட்டு வேலை, சமையல்வேலை, பிறஅலுவல்கள காரணமாக அவர்களைக் கணகாணிப்பதைத் தளர்த்திவிட்டிருக்கலாம. கல்விதான் நாம் எம்சிறார்க்குக் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய செல்வம். ஆகவே காளாந்தம் பிள்ளைகளின் படிப்பில் அவர்களைக் கண்காணிப்பது உங்கள்கடமை

எந்த அற்ப நியாயத்துக்கும் சிறார்களைப் பாடசாலைக்குப் போகாமல் தடுப்பது பல பெற்றோர்களின் பெருந்தவற. குழந்தைகள் பாடசாலைக்குப் போக விரும்பாவிடின், "தலையிடிக்கிறது, கைவலிக்கிறது, கண்நோகிறது" என்றெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லி இல்லாத வருத்தங்களை வரவழைத்து விடுவர். இவர்களை அரவணைத்தோ, கண்டித்தோ நினமும் பாடசாலைக்கு அனுப்புங்கள். ஒருநாட்பாடத்தை மாணவன் தவறவிட்டால் அடுத்தகாளில் தொடர்பான பாடமெதவும் அவனுல்விளங்கிக் கொள்ளப்படமாட்டாது. பாடசாலைக்கு ஒழுங்காகச் செலவது மாணவர் கல்வியில் ஒரு முக்கிய அமசம். இதனைப் பெண்மணிகளாகிய இல்லத்தரசிகளே!..... நீங்கள்தான் கவனிக்கவேண்டுமென்க.

—சோதரை

அற்புதவரத்தி அன்னைமாமரியே!....

வில்லை போலாந்து தேசத்திலுள்ள ஒரு நகரம். அங்கே அன்னைமரி மாதாவுக்கென ஓர் அழகிய தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. போலாந்து மக்கள் இப்பதியை ஒரு யாத்திரை ஸ்தலமாகக் கொள்வதனல் ஏராளமானோர் காளாந்தம் அந்த திருஸ்தலத்தை நாடிவருவது வழக்கமாகிவிட்டது. 1939-ம் ஆண்டில் போலாந்து தேசம் கம்யூனிஸ்தவாதிகளின் ஆக்கிரமிப்புக்காளானது. இந்த யாத்திரை ஸ்தலத்தின் சிறப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் கையாண்ட தந்திரங்களெல்லாம் வியர்த்தமாயின. வருடங்கள் பறந்து கொண்டேயிருந்தன.

1942-ம் ஆண்டின் நடுப்பகுதியில் செஞ்சட்டைப் போர்வீரனை நவன் அந்திருப்பதியின்கட்டளைக்குரவரைத் தரிசிக்க வந்தான். "தந்தையே!... நான் தேவனின் பகைவர்களது உடையை அணிந்திருக்கின்றேனே என்று வெறுக்காதீர்கள். என்னதான் இருந்தாலும் நான் ஒரு கத்தோலிக்கன. ஆகவே எனது உடன் கூட்டாளிகள் செய்யும் தோகங்கட்குப் பரிகாரஞ் செய்ய விழைகின்றேன்" என நயவஞ்சகமாகக் கூறிக கொண்டே ஏறக்குறைய 3 அங். நீளமான 2 மெழுகுவர்த்திகளை குருவின் கரங்களில் கொடுத்தான், "தயவு செய்து இவற்றை அந்த அன்னமரி மாதா சொரூபத்தின் பக்கங்களில் அவள் மகிமைக்காக எரிய விடுங்கள். கட்டாயம் செய்வீர்கள் தானே" என்றான். குருவானவரோ அந்தக் கம்யூனிஸ்த வாதியின் வார்த்தைகளைக் கேட்டு உள்ளம் உருகினர். மெழுகுவர்த்திகளை எரிப்பதாகவும் வாக்களித்தார். போர்வீரன் மகிழ்ச்சியோடு திரும்பினன்.

அன்று மாலைவேளையில் குருவர் கோவிற்கடமை பார்க்கும் மேற்பார்வையாளரைக் கூப்பிட்டார். அம்மெழுகுவர்த்திகளை மாதா சொரூபத்தின் பக்கங்களில் எரியவிடக் கட்டளையிட்டார். சக்கிறிஸ்தானும் அக்கட்டளையை சிரமேற்கொண்டான். அழகான தண்டுகளிலேற்றப்பட்ட அந்த இரு மெழுகுவர்த்திகளும் பிரகாசமாக எரிந்து அன்னையின் சொரூபத்திற்கு அழகையளித்துக் கொண்டிருந்தன. மாலை 8½ மணி இருக்கும். தனது அறையினுள் கட்டிலில் படுத்து அயர்ந்து போய்க்கொண்டிருந்த சக்கிறிஸ்தான் "மெழுகுவர்த்திகளை அணித்திடு" என்ற சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். பின்னர் இது கனவாக இருக்குமோ" என எண்ணியவாறே திரும்பவும் நித்திரையிலாழ்ந்தான். திரும்பவும் "மெழுகுவர்த்திகளை அணித்துவிடு" என்ற அதேகுரலொலி. சக்கிறிஸ்தான் எழுந்து ஓடினன் குருவிடம். தெரிவித்தான் செய்தியை. இருவருமாக அன்னை மரியின சொரூபத்தண்டை வந்தனர்

குருவர் மெழுகுவர்த்திகளை நூர்த்தார். தம்மைகளில் அவற்றை எடுத்துக்கொண்டார். அரைவாசி மட்டுமே எரிந்திருந்த அந்த மெழுகு வர்த்திகளின அடித்தண்டுகள் கனமாக இருப்பதை உணர்ந்தார். அறைவீட்டுக்கு அவற்றை எடுத்துச் சென்றார். பேனாக்கத்தி கொண்டு அவற்றைக் கீறினர். அவர் கண்டதென்ன? உள்ளே துவாரமாகத் துளைக்கப்பட்டிருந்த பகுதியில் "டைனமைட்வெடி" மருந்து வைக்கப்பட்டிருக்க மெழுகுவர்த்தியின திரியானது அதனுடன இணைக்கப்பட்டிருந்தது. அன்னை மரியின் சொரூபத்தை நிர்மூலமாக்க அங்கார வெறிபிடித்த கம்யூனிஸ்தர்களின் சூழ்ச்சி!... அச்சூழ்ச்சியின நிர்மூலமாக்கித் தமது திருஸ்தலத்தை தகுந்த சமயத்தில் காப்பாற்றியருளிய அன்னை மாமரியின் மாட்சி!... ஆலயத்திற்கு விரைந்த குருவும் சக்கிறிஸ்தானும் ஆனந்தக் கண்ணீருடன் தாய்மரிக்குத் தம் நன்றியைத் தெரிவித்தனர் என்று சொல்லவும் வேண்டுமா?...

அன்பரின் சேவையிலே!

அன்று அந்த மண்டபத்தில் பிரான்சிய சோஸலிஸ்த வாதிகளின் கூட்டம் முடிவடைந்து கொண்டிருந்தது. இறுதியுரையாக வார்த்தைகளைச் சமாரிபாகப் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தார் அக்கூட்டத்தின் தலைவர் யோண் வால்ரர். "நம் நாட்டில் நம் கம்யூனிஸ்த இயக்கத்தின் முதல் எதிரிகள் கத்தோலிக்கரே. அவர்களை அடியோடு நாசஞ் செய்ய வேண்டும். முதலில் மக்களை மயக்கித் திரியும் அந்தக் குருக்களையும், பக்திப் போர்வையில் பாசாங்குபுரியும் கன்னியர்களையும் ஒழித்து விட்டோமானல் மக்கள் நம் கைப்பொம்மைகளாகி விடுவார்கள். எனவே தீவிரமாக செயலிலீடுபடுங்கள். நம் கொள்கைகளை நம் நாட்டில் நிலைநாட்டி நாம் வெற்றி முரசு கொட்டும் நாள் அதிக தூரத்திலில்லை" என்றெல்லாம் இடித்துக் கூறினர் தன் இறுதியுரையில். கூட்டம் முடிவடைந்து வீடு நோக்கிக்கொண்டிருந்த தலைவர் யோண்வால்ரின் அருகே வந்தான் லூபி கார்னல்.

ஹலோ லூபி!...என்று அன்புடன் கூறிய யோண் வால்ர் "எங்கே இப்போதெல்லாம் நீ வீட்டுக்கு வருவதில்லையே. பூலியற் அழைப்பு அனுப்பவில்லையா?"...என்று ஆர்வமுடன் கேட்டார். "அழைப்புக் கிடைக்காவிட்டாலும் வரமாட்டேனு?...ஆனல் இப்போதெல்லாம் பூலியற் எனது வருகையில் அவ்வளவு ஆர்வம்காட்டுவதாகக் காணேம் ஒருவேளை வேறு யாராவது அவள் மனதைக் கொள்ளை கொண்டு விட்டார்களோ என்னமோ!..." என்று இழுத்தான் லூபி கார்னல். "சே!...அப்படியெல்லாம் சொல்லாதே!.....உன்னைப் போன்ற ரூபலாவண்ணிய அழகுடைய ஓர் இளைஞன் இங்கிலாந்திலேயே இல்லையே. வீணுகமனதை அலட்டிக் கொள்ளாதே பார் தம்பி!.....இந்தக் கத்தோலிக்கரை ஒழித்துக் கட்டும்வேலையில் அதிகம் ஈடுபட்டிருந்ததில் உங்கள் திருமணத்தைப்பற்றி நானும் கவனிக்காமல் விட்டுவிட்டேன். எதற்கும் நாளை நம்வீட்டில் மதியபோசனத்திருந்துக்கு வா!...அத்தடன் பூலியற்றுடன ஆலோசித்து திருமணநாளையும் குறித்துவிடுவோமே" என்றார் யோண் வால்ர். மகிழ்ச்சியுடன் அவரிடம் விடைபெற்றான் கார்னல்.

வீடு சேர்ந்த யோண் வால்ர் தமது மதியபோசனத்தை முடித்தார். நிம்மதியாகப் படுத்துறங்கினர். மாலைவேளை தேநீர் சிற்றுண்டித் தட்டுடன் அவரை அண்மினள் அவரது ஏகசெல்வி பூலிபற். "இங்கேவா பூலியற்!..... நாளை லூபி கார்னலை மதியபோசனத்திருந்துக்கு வரும்படி அழைத்துள்ளேன். வேண்டிய ஆயத்தங்களைச் செய். அத்துடன் இம்மாதத்திலேனோ உங்களிருவரதும் திருமண விழாவைக் கண்டு களித்துவிடவேண்டும் என்று அவாக் கொண்டுள்ளேன். நாளைய தினம் ஒரு நல்ல நாளையும் குறித்து விடுவோமே!...என்ன பூலியற்!..... கல்யாணமென்றதும் அவ்வளவு நாணமா?.....முகமெல்லாம் சிவந்துவிட்டதே!"...என்று தந்தை கூறினர் அன்புடன். தலை குனிந்து நின்ற பூலியற் தைரியமாகத் தந்தையை நோக்கினள். "அப்பா!...மன்னியுங்கள். என் பத்தாவாக யான் வேறொருவரைத் தெரிந்துவிட்டேன். அவரது சேவையிலீடுபட்ட நீங்கள் எனக்கு இடமளித்தேயாக வேண்டும்" என்றள் தழும்பாதகுரலில். "என்னபூலியற்!... லூபி கார்னலிடம உன் மனதைக் கவர்ந்த அந்த அழகன் யார்? பாவம்!.. கார்னலுக்கு இப்படி ஒரு பேரிடியா?.....சற்றுமுன்கூட அவனுடன் உன் திருமண விஷயமாக சம்பாஷித்தேனே!"...என்றார் மனங்கலங்கிய குரலில். "ஆம் அப்பா!.....எனது அன்பர் இந்த அவனிக்கே அரசர். ஆம்!...நீங்கள் எதிர்த்து நடபடிக்கைகள் எடுத்துவரும கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்பர்களே சு. அவர் என்னையும் ஆட்கொண்டுவிட்டார். நான் அவர் சேவையிலீடுபட முடிவு செய்து விட்டேன். நீங்கள் அனுமதிக்காவிட்டால்கூட பரவாயில்லை" என்றள் பூலியற் அழுத்தந்திருத்தமாக.

இடியேறு கேட்ட நாகமானர் யோண்வால்ர், தந்தை சோஸலிஸ்த வாதிகளின் தலைவர். தனையே சுவின் பத்தினி. "பூலியற்!"...சிங்கம் போல் கர்ச்சித்தார் யோண் வால்ர். "இந்த மூடக்கொள்கையை உன்மனதில் புகுத்தியவன் யார்?...நிச்சயம் இது ஒரு கத்தோலிக்க குருவின் வேலைதான். அவன் யாரென்று அறிந்தால் நானே அவனை மரணத்தைத் தழுவச் செய்துவிடுவேன்!"...என்று கோபாவேசமாகப் பொழிந்தார். "அப்பா!...ஒரு குரவரைக் கண்ணுல் நான் கண்டே ஆறேழு வருடங்களாகி விட்டனவே. இந்த எணணமே என் மனதில் புகக்காரணம் நீங்கள் தானப்பா" என்றள் பயப்படாமல். "என்ன!... நானு!"...திகைத்துப்போய்க் கேட்டார் வால்ர்.

"கேளுங்கள் அப்பா!...சென்றவருடத்தில ஒரு நாள். லூபி கார்னலும் நானும் காதலின்ப சம்பாஷணையில் சுடபட்டபடியே "மிலி வேர்ட்" காடுகளினூடே ஒரு நாள் உலவச் சென்றோம. அப்போது அங்கே காட்டப்பட்டிருந்த ஒரு சிலுவையைக் கண்டேன். ஆனல் அதிலே யேசுவின் உருவத்தைக் காணவில்லை. அப்புறம் பார்த்தபோது ஓரிடத்தில் அறையுண்ட நாதரின் உருவம் துண்டு துண்டாக தொறுக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். அதை எடுத்து நான் நேராக வைத்து அடுக்கியபோது என் கண்களிலிருந்து நீர் பெருகியது. லூபி கார்னல் கெக்கட்டமிட்டுச் சிரித்தார். "உன் அப்பாவின் கட்டளையால்தான் இது நடந்தது. நீ கண்ணீர் வடிக்கின்றாயே" என்றுகூறி அந்த உருவத்தைக் காலுதைத்து எறிந்தார். நானே அவரது கேலியைப் பொருட்படுத்தாமல்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

சிரியுங்கள் சில நிமிடம்!

* பாடசாலையிலிருந்து வீடுதிரும்பிய மோகன் அப்பாவிடம் வந்தான். "அப்பா! இந்த எண்களுக்குச் சி.சா.மு கண்டுபிடிக்கச் சொல்கிறாரே எங்களுடைய ஆசிரியர். எப்படியப்பா கண்டுபிடிப்பது?" என்றுகேட்டான். "சி.சா.மூவா கண்டுபிடிக்கச் சொன்னர். என்னமோகன் இன்னுமா இந்த ஆசிரியர்கள் சி.சா.மு கண்டுபிடிக்கவில்லை. நான் படிக்கிற காலத்திலேயு மல்லவா இதைக் கண்டுபிடிக்கும்படி கேட்டார்கள்" என்று அலுத்துக் கொண்டார் மோகனின் அப்பா.

* * *

* ஏன்?... என்ற கேள்வியைப் போட்டு அம்மாவைத் திணறவைப்பது சிறுவன் ரவியின் வழக்கம். அன்று ஏனம்மா மழை பெய்கிறது?" என்று கேட்டான் ஒருநாள். "அதுவா, மரஞ் செடிகொடிகள் வளரவேண்டுமென்பதற்காகக் கடவுள் மழையைப் பெய்விக்கின்றார். மழைபெய்யாவிட்டால் அவையெல்லாம் கருகி அழிந்து போய்விடுமல்லவா?" என்றுள் அமமா. 'அப்படியா'? என்று ஆமோதித்த ரவி வீட்டினுள் ஒழுகி ஈரங்கசுந்துபோயிருந்த இடத்தை அமமாவுக்குக்காட்டி "அப்படியானல் ஏனம்மா வீட்டினுள்ளே மழைபெய்கின்றது?" என்று பொறித்தான மறுகேள்வியை. அம்மா என்னபதில் சொல்லுவாள் பாவம்!

* * *

* அப்பா ஆபீசிலிருந்து திரும்பியதுதான் தாமதம், ராஜி ஓடினுள் அப்பாவிடம். "அப்பா! அப்பா! எனக்கு இன்று பாடசாலையில் இரண்டு பாடங்களுக்கு நூறுமாக்ஸ் கிடைத்ததே" என்றுள். "பலே ஜோர்!... சொம்பக் கெட்டிக்காரியாயிருக்கிறாயே" என்று மகளை முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு என்னென்ன பாடங்களில் நூறுமாக்ஸ் வாங்கினாய் என்றுகேட்டார் அப்பா. அதுவா? கணக்குப் பாடத்திற்கு 40 மாக்ஸும், தையலுக்கு 60 மாக்ஸுமாக நூறுமாக்ஸ் வாங்கினேன் என்றுள் ராஜி. அப்பாவின் முகத்தில் அசடு வழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க மண வாழ்க்கை

காதல் மணம்

'காதல்' என்ற சொல்லின் பொருளே நம்மவர்கள் நன்கு உணராத காரணத்தால், இன்று அச்சொல் ஒரு தவறான சொல்லாகவே பலரால் கருதப்படுகிறது. உண்மையில் அதுஒரு தூய்மையான சொல்லேயாகும். தாய் பிள்ளையை நேசிப்பதைப் 'பாசம்' என்றும், நண்பன் நண்பனை நேசிப்பதை 'நட்பு' என்றும், மனிதன் மனிதனை நேசிப்பதை 'அன்பு' என்றும், வறியோர், எளியோர் மட்டில் அனுதாபம் கொள்வதைப் 'பரிவு' என்றும் கூறுவதுபோல ஆண்பெண் உள்ளங்களின் அன்பைக் 'காதல்' எனும் சொல்லால் அழைக்கிறோம்.

'கூலி' என்ற சொல்லின் பெயரால் இன்று திரைப்படக் கூலிஞர்கள் காமக் களியாட்டங்கள் நடத்துவதைப்போல, 'காதல்' எனும்பெயரால் இளம் உள்ளங்கள் அப்புனிதம்வாய்ந்த சொல்லிற்குக் களங்கம் ஏற்படுத்தும் முறையில் நடந்துகொள்வதினால்தான், அப்புனிதம்வாய்ந்த சொல்லிற்கு இத்தகு இழிநிலையான கருத்து இன்று நம் நாட்டு மக்களில் அநேகரிடம் நிலவி வருகிறது.

காதல் இயற்கையானது; இது நாகரிகமடைந்த மக்களிடத்தில் மட்டும் காண்பதல்ல. நாகரிகமற்றவர் என்று கருதப்படும் மக்களிடத்திலும் இது காணப்படுவதுண்டு. பழங்காலத்து மக்களிடமும்கூடக் காதல் சிறந்து விளங்கியதாக நாம் அறிகிறோம். காற்றுப் புகாத இடத்திலும்கூட காதல்புகுந்து விடும். அது எங்கே முளைக்கும் எங்கே வளரும் என்பதை எவருமே சொல்ல முடியாது. அது ஒரு காளான். எங்கும் முளைக்கும், எங்கும் வளரும். அரசன் அடிமையைக் காதலிக்கலாம்; ஊழியன் எஜமானியைக் காதலிக்கலாம்; செல்வந்தன் ஏழையைக் காதலிக்கலாம். காதல்எனும் தூயநெருப்பிற்கு முன்னே உயர்வு, தாழ்வுஎன்பது இல்லை.

வயதுவந்த ஆண்பெண் ஒருவரையொருவர் பலதடவை பார்ப்பதாலும், பேசுவதாலும் அவர்கள் உள்ளங்களில் காதல் உருவாகிறது. அக்காதல் முதலில் உடற்கவர்ச்சியால் மூளையிட்டு, பின்னர் உள்ளக் கவர்ச்சியால் வளருகிறது.

காதல் என்பது நினைத்த மாத்திரத்தில் அழித்துவிடக்கூடிய ஓர்இலேசான நீர்க்கோலமல்ல. அது இதயத்தின் அடித்தளத்திற்பபாலும ஊடுருவிச் சென்று வேரூன்றிநிற்கும் ஒரு புனிதத் தன்மை வாய்ந்த விருட்சம். வானமே இடிந்தாலும், மண்ணுலகமே இரண்டாகவெடித்துப் பிளந்தாலும்கூட ஒரு காதல்ஜோடியின் உண்மைக்காதல் சிறிதளவும் சலனமடைவதில்லை. திரைப்படங்களில் காதலனும் காதலியும் கட்டிப்புரண்டு காதல்லீலை நடத்துவதைப் போன்றுள்ள காதலல்ல, இக்காதல். இது அதற்கெல்லாம் அப்பாற்பட்ட புனிதக் காதல். ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு உண்மை அன்போடு காதலித்து மணம்முடித்த பின்னர், அவர்கள் மணவாழ்க்கையில் எத்தனை ஆண்டுகளைக் கழித்தாலும், அவர்களிடையே ஆரம்பத்தில் இருந்த அவ்வுள்ளன்பு என்றும் குறையாது அப்படியே இறுதிவரை இருக்கும். மூப்பு என்பதை அவர்கள் உடலில் கண்டாலும் உள்ளம் காண்பதில்லை. அத்தகைய சக்தி உண்மைக் காதலுக்கு உண்டு.

இத்தகைய சிறப்பினைக்கொண்ட காதலின் தூய்மையை இன்றைய வாலிப உள்ளங்கள் நன்கு உணராமல், மலர்போன்ற மெல்லிய பொருளாகிய அதனைத் தங்கள் காலால் மிதிக்கிறார்கள். வாலிப உள்ளங்கள் ஒருவரையொருவர் காதலிப்பதில் தவறு இல்லை. எனிலும் காதலின் முக்கிய குறிக்கோள் என்னஎன்பதை அவர்கள்நன்கு புரிந்துகொள்ளவேண்டும். இன்றைய இளம் உள்ளங்களிடம் பிறக்கும்காதல் பெரும்பாலும் உடல்தொடர்பை முதன்மையாகக் கொண்டதாகவே அமைந்திருக்கிறதே ஒழிய, உள்ளத் தொடர்பு முதன்மையாகக்கொண்ட தாகத் தெரியவில்லை. உடல்அழகுக் காகமட்டும் ஒருவன் ஒருத்தியைக் காதலித்தால், அக்காதல் இறுதிவரை நிலைக்காது. உடல்அழகுக்காக ஒருத்தியைக் காதலிப்பவனும், தன்னுடைய காமஇச்சையைத் தணிக்கக் காதலிப்பவனும் காதலின் உட்பொருளை அறிந்துகொள்ளவில்லை. எனவே, உடல் அழகைக் காட்டிலும், உள்ளத்தின் அழகையே முதன்மையாகக் கொண்டு புரியும் காதல் ஒன்றுதான் உண்மைக்காதலும், இறுதிவரை நிலைக்கக்கூடிய காதலுமாகஉளது. நம்மில் அநேக இளம் உள்ளங்கள் இவ்வுண்மையைஉணருவதில்லை.

நம்மில் சிலவாலிபர்கள் வெளித் தோற்றத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு காதலிக்கின்றனர். பின்னர் சூழ்நிலையின் காரணமாகக் காதலைக் காற்றிலே பறக்கவிடுகின்றனர். இவ்வாறு காதலித்துக் கைவிடப்பட்ட பத்தினியோ பெண்களின் சோகக் கதையை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இன்னும் சிலர் வெளித்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு காதலித்து மணமுடித்தாலும், அம்மணவாழ்க்கையில் அவர்கள் இன்பம் காண்பதில்லை. ஏன் இங்ஙனே?

வெளித்தோற்றத்தை மட்டும் ஆதாரமாகக்கொண்டு, கண்டதும் கொளலும் நிகர்க்காதலால் இன்று மானிடசமுதாயத்தினிடையே எவ்வளவு சீர்கேடானநிலைமை உருவாகியுள்ளது! மேலை நாடுகளில் இத்தகைய அவசரக் காதலால் ஆயிரக்கணக்கான தம்பதிகள் மணமுறிவுநாடி அகன்றுபோவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஏன் நம் நாட்டிலும்கூட இத்தகைய இழிநிலை இல்லையென்று கூறமுடியுமா? நம் நாட்டில் ஒருசில வகுப்பாரிடம் இன்றைக்கும் 'மணமுறிவு' என்பது சர்வ சாதாரண நிகழ்ச்சியாக அல்லவா காணப்படுகிறது! உள்ளத்தோடு ஒன்றுபட்ட காதலாக இல்லாததினால் அல்லவா 'மண முறிவு' என்றஒரு தீயவழியைக் கையாளுகின்றனர்.

ஒருவன் ஒருத்தியைக் காதலிப்பதாக இருந்தால், அதற்கு கெடுநாள் வேண்டும். காதலர் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அத்தோடு எதையும்தாங்கும் இதயம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். ஒருவரையொருவர் நம்பவேண்டும்; நியாகம், நேர்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியபண்புகள் இருவரிடமும் இருக்கவேண்டும். அவர்கள் உடல்இன்பத்தைமட்டும் குறிக்கோளாகக் கொள்ளாது, உள்ளத்தோடு உறவுகொள்ள முயலவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் காதல் உண்மைக் காதலாகக்கனிந்து சிறந்துவிளங்கும். ஒருவரையொருவர் நன்குபுரிந்துகொண்டு, மணமுடித்த எத்தனையோ தம்பதிகளின் மணவாழ்க்கை இன்றுமேன்மையுடன்தான நிகழுகிறது. ஆனால் இதற்குமாறாக, காதல்என்ற பெயரால் விரைந்து மணவாழ்க்கையில் புகுந்த அநேகரின் வாழ்வு இன்று சீரழிந்த வாழ்வாகவே காட்சியளிக்கின்றது!

மேலைநாடுகளில் பெரும்பாலும்காதல் மணம் புரிந்தவர்கள் பின்னர் மணவிலக்கினைகாடி நீதிமன்றங்களுக்குச் செல்வதுண்டு. இதற்குக் காரணம் என்ன? காதலர்கள் காதலின் தூய்மையையன்றி, விரைந்து மணவாழ்க்கையை மேற்கொண்டதேயாகும். அதேமேலை நாட்டில் பெற்றோர் சொற்கேட்டு மணவாழ்வில் புகுந்தவர்கள் இன்றைக்கும் விவாகரத்தை மேற்கொள்ளாமல், இன்பவாழ்வு வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர். அங்கு பெற்றோர் தங்களுடைய குழந்தைகளின் விருப்பப்படி அவர்களுக்கு மணமுடித்துவைக்கின்றனர். ஆனால் நம் நாட்டிலோ இன்று தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளின் விருப்பத்திற்கு மாறுகப் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு மணமுடிக்கின்றனர். திருமணம ஆயிரங்காலத்துப் பயிர்அல்லவா? அதில எத்தவிதமான நிர்ப்பந்தமும் கூடாது. பரஸ்பரம் அன்பில்லாத இருஉயிர்களைப் பெற்றோர் இவ்வாறு ஒன்றுபடுத்த எத்தனிப்பது எத்தகு ஆபத்தான செயலாகும்.

நம் தமிழக கத்தோலிக்கு சமூகத்தில் ஜாதிவேறுபாடு இருக்கிறவரை, 'காதல்மணம்' பெருகுவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போலவேயாகும் மகாத்மாகாந்திகூட இந்து சமுதாயத்தினரை நோக்கி, "ஜாதி இந்துமதத்தின் அடிப்படையை அரித்துத்தின்னும் நஞ்சு" என்று எச்சரித்துள்ளார். வாலிபர்கள் ஒரே ஜாதிக்குள்ளே காதல்மணம் செய்துகொண்டால், இன்னல் இடையூறுகளுக்கு உட்படமாட்டார்கள். ஆனால், வேறு இனத்தில் காதல்மணம் செய்யும் பொழுது பல சங்கடங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இத்தகைய ஜாதிதுவேஷம் நம் தமிழக கத்தோலிக்கு சமூகத்தில் இருக்கிறவரைக்கும் நம்சமூகம் எவ்வாறு முன்னேற முடியும்? கிறிஸ்துவின் மறையுடலின உறுப்பினர்களாக இருக்கும் நம்மவர்களிடையே இத்தகைய வேறுபாடு காணக்கிடப்பது மிகவருந்தத் தக்கதொரு விஷயமாகும்.

திருச்சபையாகிய அன்னை காதல் மணத்தை வெறுப்பதில்லை. அவள் எண்ணும் அதற்கு ஆதரவு கொடுத்துத்தான் வருகிறாள். ஆனால் அவள் தன் மக்களுக்கு இதுகாரியத்தில் கூறும் அறிவுரையாதெனில்: வயதுவந்த ஆண்பெண் ஒருவரையொருவர் உள்ளன்போடு காதலிப்பதில் தவறு இல்லை. என்றாலும், அவர்கள் மணமுடிக்கிறவரைக்கும் எத்தவிதமான சிற்றின்பச் சேட்டைக்கும் இடமளிக்காமல் தங்கள் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி ஆளவேண்டும். ஏனெனில் காதலர்கள் மணமுடிப்பதற்குமுன்பு நெருங்கிப்பழகுவதால், அவர்கள் உள்ளத்தில் பலவித தீயஎண்ணங்கள் உருவாகலாம். ஆகவேதான் இத்தகைய சோதனைகளுக்கு இளம் உள்ளங்கள் பலியாகாமல் இருக்கும்பொருட்டு, மேலேகூறின கட்டுப்பாடு விதிகளை நம்தாய் தம்மக்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளாள்.

காதல் மணத்தைத் திருமறை ஆதரிக்கின்றது என்று கூறும்பொழுது, இளம்உள்ளங்கள் வேறு சமயத்தைச் சேர்ந்தவர்களோடும் காதலித்து மணமுடிக்கலாம்என்பது பொருளல்ல. இது காரியத்தில் இளம்உள்ளங்களில் ஒருவர் ஒருவனையோ, ஒருத்தியையோ காதலித்து மணமுடிப்பதாக இருந்தால் காதலர் இருவரும் கத்தோலிக்க திருமறையைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். காதலரில் ஒருவர் பிறசமயத்தைச் சேர்ந்தவராயிருந்தால் மணமுடிப்பதற்குமுன்பு அவர் திருமறையின் உறுப்பினராகி விடவேண்டும்.

காதலின் சிறப்பைப்பற்றி இப்பகுதியில் கூறியிருப்பதால், காதல்மணத்துக்கு முழுஆதரவு கொடுக்கிறேன் என்பது பொருள் அல்ல. ஒவ்வொரு ஆண்பெண் அவசியம் காதல் புரிந்துதான் மணம்முடிக்க வேண்டுமென்பதும் என் கொள்கையல்ல. இது நம் நாட்டிற்கு மாறான ஒருகாரியம் என்றாலும், காதலின் உட்பொருள் உணர்ந்து, பெற்றமனம் மகிழ, மணம்முடிப்பது போற்றத் தக்கதே.

என்னைப் பொறுத்தவரையில் நான் உண்மையைக் கூறுவதாக இருந்தால் வயதுவந்த ஆணை இருந்தாலும்சரி, பெண்ணை இருந்தாலும்சரி, அவர்கள் நெருங்கிப் பழகுவது மலைச்சரிவில் பெருங்காற்றில் நடப்பது போன்றதே. அப்படி அவர்கள் நெருங்கிப் பழகுவதாக இருந்தால் இருவரிடமும் அவசியம் 'புலன் அடக்கம்' இருக்கவேண்டும். ஏனெனில், 'புலன் அடக்கம்' ஒன்றுதான் அவர்கள் கீழேவிழுந்து விடாமல் இருக்க ஊன்றுகோல் போன்ற ஒரு கருவியாக அமைந்துள்ளது. நேர்மையான செபமும், அறிந்தவர்களுடன் ஆலோசிப்பதும் மிக உதவும்.

—இராமை சூ. மிக்கேல்ராஜ்

—யேசுநாதருடைய திருஇருதயத்தூதன்

ஆன்மாவின் அன்பின் குரலொலி

(மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பண்போல)

சந்தோஷமாய்த் தினம் பாடி
வல்ல — இறைவளின் மலர்ப் பாதம்
அன்புடன் தொழுவோம் — சந்.

வாருங்கள் இறைவனை நாடி — அவர்
அன்பின் அழகினைப் புகழ்ந்துமே பாடி
சேரும் அவர் பதம் கூடி — நாம்
சீருடன் உயர் வழி காணுவோம் தேடி.

ஆவியின் அருமையைப் பாரும் — அதில்
எரிந்திடும் வறுமைப் பிணியினைத் தீரும்
கூவி இரு பதம் நாடும் — அவர்
கொடுத்திடும் வரங்களை ஏற்குவோம் வாரும் - சந்

சீவன்கள் யாவும் அவரே — ஒரு
சிறந்த உண்மைத் தலைவரும் அவரே
தேடும் இன்பமும் அவரே — நாம்
தேடலில் நிறைவு காண்பதும் நிசமே — சந்.

எஸ். எஸ். ரெட்ரீக்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண வலை

[கொழும்பு, பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற, இலங்கை சாகித்திய மண்டலத்தின் கவியரங்கில் புலவர் கருணைய பாண்டியனர் தலைமையில் வித்துவான் ச. அடைக்கலமுத்து அவர்கள் அரங்கேற்றிய பாடல்கள்]

விருத்தம்

1. கங்கைநதி கால்களையே கழுவிச் செல்லும்
கலைமகளின் மலர்த்தவிசாம் கண்டி நாட்டில்
திங்களையே காதணிந்த மலைக்கூட் டங்கள்
திசையெல்லாம் சூழ்ந்தெந்தன் கருத்தை யீர்க்க
அங்குள்ள கந்தானை மலையிலேறி
அழகொழுகும் நிலவளத்தில் சிந்தை பாயப்
பொங்கிவரும் சிற்றூறு கதைகள் கூறப்
பூரித்த நிலம்சிரிக்க யானுங் கேட்டேன்.

குறள்வெண் செந்துறை

2. எண்ணுதெ எண்ணமெலாம் ஒருகோடி யெண்ணி
இதயத்தில் மனக்கோட்டை எழுப்பிவரும் வேளை
கண்ணுலே என்னைமிகக் கனிவிஞ்சை நோக்கிக்
கைநீட்டி அழைத்தான்அக் காலன்என்ற ஆசான்.

3. வாய்மூடிக் கைகட்டி அவன்பின்னே சென்றேன்
வழிநீளம் அவன் விரித்த **மாணவலை** கண்டேன்
ஈ போல அதில்வீழ்ந்த மனிதகுலம் காட்டி
இடியெனவே சிரித்திட்டான் ஈரமிலா நெஞ்சன்.

4. பொன்னுலே சோடித்து வாசனைகள் பூசிப்
பொட்டிட்டு மெல்லென்ற புடவைகளு மணிந்து
எந்நாளும் இவ்வுலகம் நிலைக்குமென்ற கன்னி
இருவிழியும் நீர் சொரிய மரணவலை வீழ்ந்தாள்.

5. சோற்றுக்கோ பஞ்சமில்லைக் காசுபணம் உண்டு
சுகமாக வாழ்ந்துவர மாடமனை உண்டு
கூற்றுவனை வெல்லுதற்கு வைத்தியரும் உண்டு
குறையொன்றும் இலையென்ற கோமாளி வீழ்ந்தார்.

6. கத்தியொடு பொல்லெடுத்து வாதுவழக் குரைத்துக்
கடுமொழிகள் கூறியவர் கடிதினிலே வந்தார்
சுற்றிவர எல்லிதள்ளிப் பிடிமண்ணுய்ச் சேர்த்தோர்
சோகமொடு பிடிபட்டார் மரணவலை யாலே

7. உண்ணுமல் தேடியவர் பசித்திருக்க உண்டோர்
ஒப்பற்ற அறுசுவையில் தசைசுமந்த செல்வர்
சுண்ணும்பு கொடுத்தறியார், புகழுக்கே ஈந்தோர்
சோபனம் சொல் சேர்ப்பட்டம் ஆவலுடன் பெற்றோர்,

8. மல்லியுடன் நெல்லரிசி கள்ளவிலை விற்று
வட்டியென்று வறியோர்க்கு மண்ணள்ளிக் கொட்டி
கல்லுருகி அழுதாலும் கசியாத நெஞ்சர்
காரினிலே வந்திந்தச் சோரவலை வீழ்ந்தார்.

9. ஆடுவதிற் பாடுவதில் அருங்கலையில் வல்லாள்
ஆடவர்கள் கண்களுக்கோர் அதிமதுர விருந்து
சோடிகட்டி ஒருவாரம் சுகமாக வாழ்ந்தாள்
துயரமொடு கால்வைத்தாள் துன்பவலை மீதே.

10. நேற்றுவயல் உழுதவரும் இங்குவந்து விட்டார்
நெல்லுவிதை தூவியவர் ஓடோடி வந்தார்
நாற்றுநடும் கமக்காரன் நாளைக்கு வருவார்
நானிலமோர் நாடகத்தின் மேடையன்றே தம்பீ.

11. ஆற்றோர மரம் போலப் பொலு பொலென வீழ்ந்தார்
ஆரணங்கும் பாலர்களும் அகதிகளும் மாய்ந்தார்
காற்றடித்தால் மரங்களிலே கனிவகையும் உதிரும்
காலமற்ற காய்பூவுங் கனியோடு வீழும்

12. சூத்திரத்தில் ஆடுகின்ற பாவையடா நாங்கள்
சுழற்றுபவன் நில்லென்றுல் நீயென்ன செய்வாய்
பாத்திரத்தைத் தூய்மையொடு பேணிக்கொள்; அங்கே
பயிராக்கு புண்ணியங்கள் பலனையறுப் பாயே.

சகல சமயங்களையும் மதித்து நடக்க சர்வசமய மகாநாடு

அமெரிக்கதேச, தலைப்பட்டண மாகிய வாஷிங்டன் நகரில் இரு வாரங்களுக்குமுன் சர்வசமய மகா நாடு ஒன்று நடைபெற்றது. அதில் இந்துக்கள், மகமதியர், பௌத்தர், பல பிரிவுக் கிறீஸ்தவர்களுடன் வேறு பல மதத்தினரும் பங்குபெற்றனர். அதில் கூடியிருந்த சகலரும் வத்திக்கான் பிரகடனங்களுள் ஒன்றுகப் "பிறசமய மதிப்பு" இடம்பெற்றிருப்பதைப் பாராட்டினர். "தனது சமயத்தைத் தெரிந்து, அதன்படி ஒழுகுதல் மனித உரிமைகளுள் ஒன்று"என வத்திக்கான் சங்கம் கூறி இருப்பது சகலருக்கும் திருப்தி அளித்தது.

தென்வியற்னும் மேற்றிராணிமார் யுத்த சமாதானப் பேச்சை விரும்புகின்றனர்

பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப் பரசரின் அயராத முயற்சியைப் பின் பற்றி, தென்வியற்னும் மேற்றிராணி மாரும் தமது தேசத்தில் நடந்து வரும் யுத்தத்துக்கு இறுதிகாண உலக தேசத்தலைவர்களைக் கேட்டிருக் கின்றனர். கொமியூனிசத்தை முழுப் பலத்தோடும் எதிர்க்கும் இம்மேற்றி ராணிமார்கள் அவர்களுடன் ஒரு சமாதானத்துக்கு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்வது, அந் நர்ட்டில் யுத்தத்தினுல் ஏற்பட்டிருக் கும் கஷ்டப்பு எவ்வளவு என்பதைக் காட்டுகின்றது.

2-ம் வத்திக்கான்

யேசுவின் சபையின் ஒன்றிப்பு

யேசுக்கிறிஸ்து
தம்மையே
மாசற்ற பலிப் பொருளாகச்
சிலுவை எனும் பீடத்திலே
ஒப்புக்கொடுக்குமுன்பு
விசுவாசம் கொண்டவர்களுக்காகத்
தந்தையிடம் பின்வருமாறு வேண்டினர்.
"எல்லாரும் ஒன்றுய் இருப்பார்களாக.
தந்தாய்,
நீர் என்னிலும்
நான் உம்மிலும் இருப்பதுபோல
அவர்களும் நம்மில்
ஒன்றுய் இருக்கும்படி
வேண்டுகிறேன்.
நீர் என்னை அனுப்பினீர் என்று
இதனல் உலகம் விசுவசிக்கும்" (அரு. 17 : 21).

தமது திருச்சபையிலே
அவர் வியத்தகு
திருவருட் சாதனமாகிய
நற்கருணையை ஏற்படுத்தினர்.
இந்த நற்கருணை
திருச்சபையின் ஒன்றிப்பைக்
குறித்துக் காட்டுகிறது;
அதனை விளைவிக்கவும் செய்கிறது.
ஒருவர் ஒருவரோடு அன்புகொள்ளப்
புதிய கட்டளை ஒன்றை
அவர் தம் சீடர்களுக்கு அளித்தார்;
பரிசுத்த ஆவியை
அவர்களுக்கு வாக்களித்தார்.
ஆண்டவரும் உயிரளிப்பவருமான
இப்பரிசுத்த ஆவி
அவர்களோடு என்றும் இருப்பார்.
சிலுவையிலே உயர்த்தப்பெற்று
மாட்சிமை பெற்ற
ஆண்டவர் யேசு
தாம் வாக்களித்த
பரிசுத்த ஆவியைப் பொழிந்தார்.
இவர் வழியே கிறிஸ்து,
திருச்சபை என்னும்
புதிய உடன்படிக்கையின் மக்களை
விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு
ஆகியவற்றின் ஒருமைப்பாட்டிற்கு
அழைத்து ஒன்றுசேர்த்துள்ளார்.
இவ்வாறே,
அப்போஸ்தலரும் போதிக்கின்றார்;
"உங்களுக்கு உண்டான அழைப்பினுல்
ஒரே நம்பிக்கைக்கு
நீங்கள் அழைக்கப்பட்டிருப்பதுபோல
உங்களுக்கு ஒரே சரீரமும்,
ஒரே ஆத்துமமும் உண்டு.
ஒரே ஆண்டவரும்,
ஒரே விசுவாசமும்,
ஒரே ஞானஸ்நானமும் உண்டு" (எபே. 4 : 4—5).
"எப்படியெனில்
கிறிஸ்துநாதரிடத்தில்
ஞானஸ்நானம் பெற்றிருக்கிற
நீங்களெல்லோரும்
கிறிஸ்துநாதரை அணிந்துகொண்டிருக்கிறீர்கள்...
நீங்கள் எல்லோரும்
யேசுக்கிறிஸ்துநாதரிடத்தில்
ஒன்றுயிருக்கிறீர்கள்" (கலா. 3 : 27—28).
விசுவசிப்போரில் குடிகொண்டுள்ள
பரிசுத்த ஆவி
திருச்சபை முழுவதிலும் நிறைந்து நின்று
அதை ஆண்டுவருகிறார்.
விசுவாசிகளிடையே
இந்த வியத்தகு ஒற்றுமையை
விளைவிக்கிறார்.
இவ்வாறு, ஒன்றிப்பின் ஊற்றுய்த்
திருச்சபையில் திகழ்கின்றார்.
இவர்
கொடைகளையும் பணிகளையும்
பகிர்ந்தளிக்கிறார்.
"அர்ச்சிக்கப்பட்டவர்கள்
உத்தமதனத்தை அடையும்பொருட்டே
சுவிசேஷத்தின் வேலைக்காகவும்
கிறிஸ்துவினுடைய சரீரமாகிய
சபையைக்கட்டி எழுப்புவதற்காகவும்" (எபே. 4 : 12).
யேசுக்கிறிஸ்துவின் திருச்சபையை
வெவ்வேறு அலுவல்களால்
வளப்படுத்துகிறார்.
உலக முடிவுவரை
தமது இப்புனிதத் திருச்சபையை
உலகெங்கும்
நிலைநாட்டுவதற்காகப்
போதித்து, ஆண்டு, புனிதப்படுத்தும்
பணியைக் கிறிஸ்து
பன்னிருவர் குழுவிடம் ஒப்படைத்தார்.
அவர்களில் இராயப்பரைத் தெரிந்தெடுத்தார்.
அவரது விசுவாச அறிக்கைக்குப்பின்
அவர்மேல் தமது திருச்சபையைக்
கட்டுவதாகத் தீர்மானித்தார்.
அவருக்குத் தம்மிடம் அன்பு கொண்டிருப்பதாக
உறுதிமொழி பெற்றபின்,
கிறிஸ்து
தம் ஆடுகள் யாவற்றையும்
விசுவாசத்தில்
உறுதிப்படுத்துமாறும்,
நிறைவான ஒற்றுமையுடன்
அவற்றை ஊட்டி வளர்க்குமாறும்
அவரிடம் ஒப்படைத்தார்.
எனினும்,
கிறிஸ்து யேசுவே என்றும்
முக்கிய மூலைக்கல்லாகவும்
நம் ஆன்மாக்களின் மேய்ப்பராகவும்
விளங்குகின்றார்.
அப்போஸ்தலரும்,
இராயப்பரைத் தலைவராகக்கொண்ட
ஆயர்களான அவர்களின்
வழித்தோன்றல்களும்
நற்செய்தியைப் பிரமாணிக்கத்துடன்
போதிப்பதாலும்,
திருவருட்சாதனங்களை வழங்குவதாலும்,
அன்புடன் ஆள்வதாலும்
பரிசுத்த ஆவியின் துணையால்
தம் மக்களின் எண்ணிக்கையை
அதிகரிக்கவிரும்புகிறார் யேசுக்கிறிஸ்து
ஒரே விசுவாசத்தை அறிக்கையிடுவதாலும்,
பொது இறைவழிபாடு நடத்துவதாலும்,
இறைவனின் குடும்பத்திலே நிலவும்
சகோதர இசைவினைக்கத்தாலும்
அவர்களின் உறவை ஒன்றிப்பில்
உறுதிப்படுத்துகிறார்.
இவ்வாறு,
இறைவனின் ஒரே மந்தையான
திருச்சபை நாடுகளிடையே
உயர்த்தப்பட்ட ஓர் அடையாளமாகத்
திகழ்கின்றது.
மனித இனம் முழுமைக்கும்
அமைதியின் நற்செய்தியை அளித்துக்கொண்டு
தன் முடிவாகிய
வானகத் தாய்நாடு நோக்கி
நம்பிக்கையோடு
திருப் பயணம் செய்கிறது.
பரிசுத்த ஆவி
வெவ்வேறு கொடைகளை அளிக்க,
கிறிஸ்துவிலும்,
கிறிஸ்துவின் வழியேயும்
உருவாகும் திருச்சபை
ஒற்றுமையின் மறைபொருள்
இதுவே.
தந்தை, மகன், பரிசுத்த ஆவி எனும்
ஒரே இறைவன்
மூவொரு கடவுளின் ஆட்களில்
கொண்டுள்ள ஒன்றிப்பே
இந்த மறை பொருளின்
ஒப்புயர்வற்ற மாதிரியும் சுனையும் ஆகிறது. (2)

● தேயிலையைச் சுத்திகரிக்கும் நவீன யந்திரம்ஒன்று பிரித்தானியில் கண்டுபிடித்துச் செய்யப்பட்டுள்ளது. இது தானுகஇயங்கிச் சுத்தமான தேயிலையைக் கழிவுகளிலிருந்து பிரித்தெடுக்கிறது. மின்சக்தியால இயங்கும் இந்தயந்திரம் ஈரத்தன்மை, மற்றும் தேயிலைக்காம்புகள், இலைத்தண்டுகள் முதலாம் கழிவுகளையும் சுத்தமாகப் பிரித்தெடுத்து விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டுத் தீர்மானங்கள்

1968 (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக நாட்டு மக்கள் தங்கள் சமூக சேவைகளில், உரிமைகளில் கண்ணுங்கருத்துமாயிருந்து—இலே எனும் விளிப்பாயிருந்து தங்கள் நாட்டின் நலனுக்கு உழைக்கவேண்டிய அருங்கடமை பூண்டவர்களாயிருக்கின்றனர்.

சமூகத்துறையில் மக்களுக்குப் பல கடமைகள் இருப்பனபோலவே சமயத்துறையிலும் அவர்களுக்குப் பல விதத (தவிர்க்க முடியாத) கடமைகள் இருக்கின்றன. இக்கட்டுரையின் பிரதான நோக்கம் இலங்கைவாழ் கத்தோலிக்கருக்கு இப்புதிய ஆண்டிலுள்ள சிறப்பான கடமைகளை ஆராய்வது என்று கூறலாம்.

1965-ம்ஆண்டு நடந்தேறிய இரண்டாம் வத்திக்கான் சங்கத் தீர்மானங்களும் அவற்றைத் தொடர்ந்து திருச்சபைத் தலைவராம் ஆறாம் சின்னப்பப் பாப்பரசரும் விடுத்த பலவித வேண்டுகோள்களும் 1968-ம் ஆண்டில் கத்தோலிக்கமக்கள் எடுக்கவேண்டிய சமய சம்பந்தமான தீர்மானங்களை வெளிப்படுத்துகின்றன.

முதன்முதலாகத் திருச்சபையின் அனுசரணைகளில் ஏற்படுகின்ற ஏற்படப்போகின்ற பலவித மாற்றங்களை நாம் எல்லவரும் (அவற்றை நாம் விரும்பினாலென விரும்பாவிடிலென்ன) நல்லமனதோடு ஏற்று, அவற்றைக் கைக்கொண்டு (தாழ்மையுடன்) அனுசரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இம்மாற்றங்கள் தூய ஆவியானவரின் ஏவுதலால்—இலே அவரின் உதவிபால்தான்—நடைமுறைக்கு வருகின்றன என்று நாம் உணமையாகவே விசுவசிதீதோமாகில் இம்மாற்றங்களை நாம் மனமகிழ்ச்சியுடன் வரவேற்போம். இவ்வாறு 'நாம் இவற்றை நல்மனதோடு வரவேற்போம்" இதுவே எங்களின் முதல் தீர்மானமாக இவ்வாண்டில் இருக்கவேண்டும்.

இரண்டாவதாக 1967 ஆனிமாதம் 25-ந்திகதி துவக்கம் 1968 ஆனிமாதம் 25-ந் திகதிமட்டும் விசுவாசத்தின் வருடமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக இவ்வருடத்தில் விசேஷமாக நமது விசுவாசம் நாம் செல்லுமிடமெல்லாம் துலாம்பரமாக விளங்குமாறு நாம் வாழவேண்டும். இதையும ஒரு தீர்மானமாக நாமெடுத்து இப்புதிய வருடத்தில் இதைச் சாதிக்கவேண்டும்.

மூன்றுவது 1968-ம் ஆண்டில் உலக சமாதானத்துக்காக நாம் உழைக்கவேண்டும். அதற்காக நாம் தினமும் பிரார்த்திக்கவேண்டுமென்றும் எமது தற்காலப் பாப்பரசர் (ஆறுவது சின்னப்பர்) மிகவும் விநயமாய் எங்களைக் கேட்டுக்கொண்டார். இவ்வறை கூவலைக் கத்தோலிக்கராகிய நாம் எமது உச்சிமேற்கொண்டு அதற்காக உழைத்துவர வேண்டும். எங்களைச் சுற்றி வாழும் ஏனைய சமூகத்தினருடனும் சமயத்தவருடனும், நாம் சமாதானமுடையவர்களாய், ஒற்றுமையாய்ச் சிந்தித்துச் சமாதானத்தூதர்களாய் விளங்குவோமென்ற தீர்மானத்தை எடுப்போமாக.

சற்றில் இவ்வாண்டு (1968) பெந்தெக் கோஸ்து தினத்தன்று இலங்கை மாகாணச் சங்கம் நடைபெறவிருக்கிறது. இச்சங்கம் எங்கள் நாட்டிலே எங்கள் நாட்டுத் திருச்சபையைச் சேர்ந்த மக்களின் நலத்துக்காக எங்கள் ஆயர்கள், குருக்கள், சகோதரிகள், கன்னியாஸ்திரிகள் ஏனைய இல்லற கத்தோலிக்காலேயே நடத்தப்படவிருக்கின்றது. எனவே, அதன் சித்திக்காகத் தூய ஆவியானவரைப் பார்த்துத் தினமும் நாம் மன்றாடவேண்டும்; மன்றாடவேண்டியவர்களாயு மிருக்கிறோம். இதுவும் எமது புத்தாண்டுத் தீர்மானங்களுள் ஒன்றாய் நிச்சயமாகவே இருக்கவேண்டும்.

இலங்கைப் பாடசாலைகளில் பாவனைக்குவரும் வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பெற்ற 1968-ம் ஆண்டிற்கான

கத்தோலிக்க மறைக்கல்வித் தமிழ்ப்பாட நூல்கள்

வகுப்புகள்	பாடநூல்கள்	பாகம்	விலை
2ஆம் வகுப்பு	நமது வழித்தொடர்ச்சி	1-ம் பாகம் ...	... 1-75
3ஆம் ,,	நமது வழித்தொடர்ச்சி	2-ம் பாகம் ...	... 2-00
4ஆம் வகுப்பு	நமது வழித்தொடர்ச்சி	3-ம் பாகம் ...	... 2-00
	அன்பின் ஆட்சி	1-ம் பாகம் ...	... 50
5ஆம் வகுப்பு	நமது வழித்தொடர்ச்சி (அச்சில்)	4-ம் பாகம் ...	
	அன்பின் ஆட்சி	2-ம் பாகம் ...	... 50
6ஆம் வகுப்பு	வாழ்வும் வழியும் ... ... அனுபந்தம் — திருச்சபைச் சரித்திரம் பிரதான சம்பவங்கள் உட்பட	1-ம் பாகமும்	... 1-25
7ஆம் வகுப்பு	வாழ்வும் வழியும் ... ... அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் போர்த்துக்கேயர் காலம் — 1505—1658 உட்பட	2-ம் பாகமும் ...	... 1-25
8-ஆம் வகுப்பு (J. S. C.)	கத்தோலிக்க திருமறை விளக்கம் அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் ஒல்லாந்தர் காலம் 1658 — 1796 உட்பட ...	1-ம் பாகமும்	... 1-25
9ஆம் வகுப்பு (Prep S.S.C.)	கத்தோலிக்க திருமறை விளக்கம்	2-ம் பாகம் ...	... 1-50
10ஆம் வகுப்பு (G.C.E.)	கத்தோலிக்க திருமறை விளக்கம் சுவிசேஷங்களுள், அருளப்பர் சுவிசேஷம் தவிர, ஏனைய மத்தேயு, மாற்கு, லூக்காஸ் சுவிசேஷங்கள் குறிப்பிட்ட ஒழுங்கின்படி உபயோகிக்கவும்.	3-ம், 4-ம் பாகம் ...	... 1-50

கிடைக்குமிடம்: அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

அன்பரின் சேவையிலே!...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

உடைந்த தணடுகளை யெல்லாம் எனது பூக்கூடையினுள் சேகரித்தேன். எனது அறைக்குக் கொண்டுவந்தேன். காளாந்தம் அபர் யேசுவின் அவல நிலை கண்டு கண்ணீர் வடித்தேன். ஞானஸ்நானத்தில் நான் பெற்ற அருள் இத்தனை காலமும் தங்கள் கட்டுப்பாட்டால் அனுசரிக்கப்படாதிருந்தும் இப்போது என்னில் ஒளிவீசத் தொடங்கியது. என் நேசயேசுவே!... எனது தந்தை உமக்கிழைத்த அநீதிக்குப் பரிகாரமாக காலமெல்லாம் உம் பாதசேவை செய்வேன் என்று வாக்களித்தேன். அதை செயலாற்றப் போகிறேன். உத்தரவு கொடுங்கள்" என்று எடுத்துக் கூறினள் யூலியற்.

தந்தையோ தடையின்மேல் தடையாக விதித்தார். லூயி கார்ணலோ அவள் அன்புக்காக கெஞ்சினன். தவங்கிடந்தான். யூலியற்றோ யேசுவின் பத்தினியாவதில் விடாப்பிடியாக நின்றாள். இறுதியில் யூலியற்றுக்கே வெற்றி கிட்டியது. தூரவுற அந்தஸ்தில் இணைய மனமின்றிச் சம்மதித்தார் தந்தை. இரண்டு வருடங்கள் ஓடின. யூலியற் கன்னிகையாகவார்த்தைப்பாடு கொடுத்த நாளில் தந்தையோண் வால்ரர் தான் அனுசரியாதிருந்த கத்தோலிக்கசமய அனுட்டானங்களில் ஈடுபட ஆரம்பித்தார். வருடங்கள் ஓடின. மற்றொரு இன்பச் செய்தியை தம்பத்தினிக்கு அனுப்பினர் இறைவன் யேசு. லூயி கார்ணல் பலிபீடத்தில் தேவபலியையாற்றும் குருவானர் என்ற சுபசெய்திதான் அது. யூலியற்றின் நியாகம் தந்த இனிய கனியல்லவா அது.

கோவே எம்மை ஏற்பாயே..!

பதுவை பதிய ரானவரே
பாவி களுக்காய் தான்நீரே
மதுவை யேந்தும் மலர்போல
மாபா லன்கரம் ஏந்தினீரே
புதுமை பலதும் செய்தீரே
பூவுல கோரும் தான்வாழ
இதுகை என்று கரம்நீட்டி
இன்னல் வேளை காப்பீரே
பால யேசு தான்வந்து
பதிலாய் உமக்கு ஜெபித்தாராம்
தாள முடியா பெருந்துன்பம்
தாங்கிக் சொள்ள ஜெபிப்பீரே
கால மெல்லாம் கசிந்துருகி
கண்ணீர் மல்கி உருகினனே
ஆழ விடாதீர் பவக்கடலில்
அன்பாய் என்னை ஏற்பீரே
சாதி சமய பிளவின்றி
சகல ருமே உமைதுதிப்பார்
ஆதிப் பொருளாம் அன்புப்பிதா
அவர்க்கு அருளி புதுமைசெய
ஓதி யுணர்ந்த வல்லமையை
ஓருயர் வரமாய் தந்தாரே
நாதி யற்ற எங்களையே
நயமாய் ஏற்பாய் ஏற்பாயே
தீபஸ் தம்பம் நீயாவாய்
திசைக்காட் டும்கரு வியாவாய்
பாபக் கடலில் உழல்வோர்கள்
பற்றும் தோணி தானுவாய்
தாகம் கொண்டோர் தணிக்கேகும்
தண்மெய் சுனைநீர் தானுவாய்
கோபக் கனலாய் மாறுமல்
கோவே எம்மை ஏற்பாயே...!

—ஜெயம்

மெளனமே மங்கையருக்கு மேன்மையான மணி ஆரம்.
ஆனால், அணிந்தால் அல்லவோ?

மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினல் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்

பாரம் குறைந்த
நீர் இறைக்கும்
இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட
நீர் இறைக்கும்
இயந்திரங்களுடன்
அறிமுகப்படுத்துகிறோம்

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ம்ஆண்டு தைமீ 27-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org